பக்கங்கள்: 18

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 தை 20 வெள்ளிக்கிழமை 03.02.2023 கதிர் 87

இது ரகசியம் அல்ல!

கோமாவிலிருந்து முழித்தவர் மாதிரி தமிழ் அரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா திடீரென நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார். நாட்டில் என்னென்னவோ எல்லாம் நடக்கின்றன.

☞2

### பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில்

# சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தி மட்டக்களப்பு வரையும் 4 நாள் பேரணி

### கரிநாளில் யாழ்ப்பாணத்தில் தொடங்கும்

(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம், பெப். 3

அரசின் அடக்குமுறையை எதிர்த்தும் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தியும் வடக்கிலிருந்து கிழக்கு நோக்கி பேரணி இடம்பெறும் என்று பல்கலைக்கழக மாணவர்கள் அறிவித்துள்ளனர்.

தமிழர்களின் கரிநாளான இலங்கையின் சுதந்திர தினத்தன்று இந்தப் போராட்டம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தொடங்கும்.

☞2

# 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தவே வேண்டாம்!

### ஜனாதிபதிக்கு மகாநாயக்க தேரர்கள் கடிதம்

**அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டாம் என்று மகாநாயக்க தேரர்கள், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கூட்டாக வலியுறுத்தியுள்ளனர்.**

**இது தொடர்பில் மகாநாயக்க தேரர்களின் கையொப்பங்களுடன் 2023.02.01 ஆம் திகதியிடப்பட்ட கடிதம் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது.**

☞2







### மகாநாயக்க தேரர்களை நேரில் சந்தித்து ஆசி பெற்றார் ரணில்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முற்பகல் மல்வத்து, அஸ்கிரி மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து ஆசி பெற்றார்.

☞2

## ‘13’ திருத்தம் முழுமை பெற ஒருபோதும் இடமளியோம்

### கொழும்பு செயலமர்வில் விமல் சபதம்



அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த ஒருபோதும் இடமளிக்கமாட்டோம் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச எம்.பி. தெரிவித்தார்.

13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில்

☞10

## தெற்கின் ஜனநாயகத் தரப்புகள் தமிழரின் நீதியை ஏற்கவேண்டும்

(இ.கலையமுதன்)

தென்னிலங்கையிலே மனித உரிமை மீறல், இலஞ்சம், ஊழல், பொருளாதார பிரச்சினைகளுக்காகப் போராடும் ஜனநாயகத் தரப்புக்கள் தமிழ் மக்களின் அரசியல் நீதியை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக்

☞10



சிறீகாந்தா வலியுறுத்து

## இராணுவத்தின் சுதந்திரதினம் இன்று முத்துத்தம்பி வித்தி.யில்

யாழ்ப்பாணம், பெப்.03

இலங்கை இராணுவத்தினரின் ஏற்பாட்டில் 75ஆவது சுதந்திர தின நிகழ்வு இன்று திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் இடம்பெறுகின்றது.

☞10

## துரையப்பாவில் சுதந்திர தினம்

(இ.கலையமுதன்)

தேசிய சுதந்திரதின நிகழ்வுகளின் வடக்கு மாகாணத்திற்கான பிரதான நிகழ்வு யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது.

இலங்கையின் 75 ஆவது தேசிய சுதந்திர தின நிகழ்வுகள்

☞10

# 3 வீடுகள் சேதம்



சீரற்ற காலநிலை காரணமாக கடந்த இரண்டு தினங்களில் யாழ்ப்பாண மாவட்டத்தில் மூன்று வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக மாவட்ட இடர் முகாமைத்துவப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜ் தெரிவித்தார்.

ஆறு குடும்பங்களைச் சேர்ந்த பதினெட்டு பேர்

☞10

## நீதிவான் முன்பாகவே தப்பியோடிய கைதி

### மட்டக்களப்பில் பரபரப்பு

மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்திலிருந்து ஆண் கைதி ஒருவர் நேற்று தப்பியோடியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

☞10

### கரைத்துரைப்பற்று வேட்புமனு நிராகரிப்பு

## விவரங்களை உடன் அனுப்ப கோருகிறது உயர் நீதிமன்று


(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், பெப்.02

கரைத்துரைப்பற்று பிரதேச சபையில் தமது வேட்புமனு நிராகரிக்கப்பட்டமை தொடர்பாக தமிழ் அரசுக் கட்சி தாக்கல் செய்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. அப்போது அன்றையதினம் நடந்தவற்றின் விவரங்களை மாவட்ட தெரிவத் தாட்சி

☞10

## காணி விடுவிப்பு நிகழ்வை விக்கி இன்று புறக்கணிப்பு



வலி. வடக்கில் இன்று 108 ஏக்கர் காணி விடுவிக்கப்படும் நிகழ்வைத்தான் புறக்கணிக்கிறார் என்று வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

☞10

## ஹெரோயினுடன் கான்ஸ்டபிள் கோப்பாயில் நேற்றிரவு கைது

ஹெரோயினுடன் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கின்றார். கைது செய்யப்படும் போது அவரிடம் 100 மி.கி. ஹெரோயின் கைப்பற்றப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

☞10

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை ரணில் முழுமையாக நடைமுறைப் படுத்துவாரா? அதற்கு இனவாதிகள் இடம்விடுவார்களா? என்று பெரும் விவாதம் போய்க்கொண்டிருக்கும் நிலையில் அதுபற்றியெல்லாம் எந்தக் கவலையும் இல்லாமல் தமது கட்சியைச் சேர்ந்தவர்களான நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மீதும் சட்டத் தரணியும் கொழும்புக் கிளைத் தலைவருமான தவராசா மீதும் செயற்குழுவைக் கூட்டி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப் போகின்றேன் என்றார்.

சரி உங்கள் கட்சியின் ஒழுக்கமற்ற உறுப்பினர்கள் மீது தலைவராக நீங்கள் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்துவிட் டுப்போங்கள். அதை மக்களுக்கு செய் தியாளர்களைக் கூட்டி பகிரங்கமாக அறிவிக்க என்ன இருக்கிறது. கரிநாள் போராட்டம், 13இன் முழுமையான நடைமுறையாக்கல் என்று நாடே பற்றி யெரிந்துகொண்டிருக்கும் போதுதானா, பிடில் வாசிக்கும் நீரோ மன்னன் போன்று உங்கள் கட்சியின் உள்வீட்டு விவகாரங்களை பொதுவெளிக்குக் கொண்டு வருவீர்கள்?

கட்சித் தலைவர் என்பவர் கட்சியின் நிறைவேற்று அதிகாரி. கட்சி ஒழுக் கத்தை உறுப்பினர் ஒருவர் மீறினாரா னால் அவர் மீது தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டியதுதானே, அதற்கெ தற்கு செயற்குழுவைக் கூட்டவேண் டும். தலைவர் எடுத்த நடவடிக்கையு டன் கட்சியின் ஏனைய தலைவர்க ளுக்கு முரண்பாடு இருந்தால்தான் அது பற்றி செயற்குழுவிலோ அரசியல் குழுவிலோ ஆராயப்படவேண்டும். அந்தக் குழுக்களில் எல்லாம் இந்த நடவடிக்கைக்காகத் தனக்கு ஆதரவு கிடைக்காது என்று நினைத்ததால் தானோ என்னவோ ஊடகங்களுக்கு முன்பாக இந்த விவகாரத்தைக்கொண்டு வந்திருக்கிறார் மாவை.

உட்கட்சி விவகாரத்தை தலைவரே இப்படி உள்ளேயே நடவடிக்கை எடுக் காமல் பொதுவெளியில் காவித் திரிந் தால், மற்றைய உறுப்பினர்கள் மட்டும் எப்படி உட்கட்சி விவகாரத்தை உள் ளேயே தீர்த்துக்கொள்வார்கள்? தலை வன் எவ்வழியோ குடிகளும் அவ்வழியே என்று அவர்களும் அப்படித்தான் நடந்துகொள்வார்கள்.

எல்லாம் சரி, இப்போது சுமந்திர னுக்கு எதிராக தவராசா கூறிய கருத்துக் களுக்கு அவர் மீது நடவடிக்கை எடுக்கப் போக, இதற்கு முன்னர் கட்சிக்குள் சுமந்திரனுக்கு எதிராக பொதுவெளியில் கருத்துச் சொன்னவர்களுக்கு எதிராகக் கடந்த காலங்களில் நடவடிக்கை எடுத் திருக்கிறீர்களா என்று தவராசா தலை வரைப் பார்த்துக் கேட்டால் முகத்தை எங்கே கொண்டுபோய் வைத்துக் கொள்வது?

அதுபோலவே, தமது முன்னாள் பங்காளிகளான புளொட், ரெலோ, ஈபிஆர்எல்எவ் கட்சிகள் தொடர்பில் சுமந்திரன் தெரிவித்த கருத்துக்கள் ஒற்றுமையைச் சீர்குலைக்கும் என்று மாவை கருதி அவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்போக, அதே கட்சித் தலைவர்கள் தனக்கு எதிராக பொது மேடைகளில் முழங்கித் திரிந்தபோது எங்கேயிருந்தீர்கள் என்று சுமந்திரன் கேட்டால் எங்கே போய் முகத்தை வைத்துக்கொள்வது?

என்ன இது......! எதையும் செய்வதற்கு முன்னர் பிளான் பண்ணிச் செய்ய வேண்டாமா?

***

2018ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபைத் தேர்தலில் புளொட், ரெலோ, தமிழ் அரசுக்கட்சி (சிறிகாந்தா அப்போது ரெலோவில் இருந்தார்) ஆகியன இணைந்து போட்டியிட்டபோதும் பல சபைகளில் முழு வெற்றியைப் பெற முடியவில்லை, அப்படியிருந்தும் இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பிரிந்து செல்கிறார்கள் என்றால் அவர்கள் இருக்கவேண்டியது அங்கொடை மன நல மருத்துவமனையில் என்று தெரி வித்திருந்தார் தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ந.சிறிகாந்தா.

கடந்த தடவை தமிழ் அரசுக் கட்சி யின் பெயரில் தமிழ்க் கூட்டமைப்பு என்று மூன்று கட்சிகள் ஒன்றாகக் கேட்டபோது தொகுதிகளில் அந்தக் கட்சி அதிக ஆசனங்களைக் கைப்பற் றியது. ஆனால், தொகுதிகளில் தோற் றவர்கள் அந்த வாக்குகளையும் எடுத் துக்கொண்டு பிரதிநித்துவத்தின் கீழ் அதிக ஆசனங்களைப் பெற்றார்கள். இந்தக் கணக்கு வழக்கை கருத்தில் கொண்டுதான் ஒரு பரிசோதனையைச் செய்து பார்க்க தமிழ் அரசுக் கட்சி முற் பட்டது. இதற்காக ஏன் மற்றவர்கள் பதற்றப்படவேண்டும்?

அதுதான் ஒன்றாக இருந்தபோதும் பல சபைகளைக் கைப்பற்ற முடிய வில்லை என்று நீங்களே சொல்லிவிட் டீர்களே? இதில் பிரிந்து நிற்பதால் என் னத்தை இழந்துவிடப்போகிறீர்கள். ஒருவேளை தமிழ் அரசுக் கட்சியின் கள்ளக் கணக்கு வெற்றியாகிவிட்டால் அப்போதும் தமிழ் அரசுக் கட்சி தனித்து ஆட்சியமைக்க எந்தச் சபையிலும் அதற்குப் பெரும்பான்மை இருக்காது என்பது இதைக் கணித்தவர்களுக்குத் தெரியாமலில்லை. அத்தகைய நேரத்தில் ரெலோ, புளொட் போன்ற ஏனைய கட் சிகளின் உதவியுடன்தான் அந்தக் கட்சி ஆட்சியைப் பிடிக்க முடியும். யதார்த்தம் அப்படி இருக்கும்போது எதற்குப் பதற்றம்?

உங்கள் பதற்றம் எல்லாம் உள்ளூ ராட்சி சபைத் தேர்தலைப் பற்றியதல்ல. தமிழ் அரசுக் கட்சி இப்படித் தனியே பிரிந்து போனால் பின்னர் மாகாண சபையிலும் நாடாளுமன்றத் தேர்தலி லும் இதே நிலை தொடரும், அப்படித் தொடர்ந்தால் அது தமிழ் அரசுக் கட்சியைத் தவிர மற்றைய கட்சிகளைப் பாதிக்கும் என்பதுதான். அதனால்தான் எல்லோருமாகச் சேர்ந்து சுமந்திரனை இலக்கு வைத்துத் தாக்குகிறீர்கள்.

அவரும் கட்டுப்பாட்டை இழந்து உங்கள் தரத்துக்கு பதிலடி என்று இறங் கிவிட, குய்யோ முறையோ என்று குள றுகிறீர்கள். நீங்கள் பயப்படுவது பர வாயில்லை. இப்போது பாருங்கள் மாவையரையும் பயப்பிட வைத்துவிட் டீர்களே, இது நியாயமா?

- இடிமின்னல் -

## சுயநிர்ணய .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நான்கு நாள் வாகனப் பேரணியாக அது மட்டக்களப்பைச் சென்றடையும்.

பேரணியின் பாதை குறித்து பல் கலைக்கழக மாணவர்கள் அறிவித் துள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்க ளப்பு நோக்கி முன்னெடுக்கப்படும் இந்தப் பேரணியானது நாளை காலை 10 மணிக்கு தொடங்கும். யாழ். பல் கலைக்கழக பரமேஸ்வரா வளாகத்தி லிருந்து தொடங்கும் பேரணி காங்கே சன்துறை வீதி வழியாக தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவுத் தூபியை அடைந்து அங்கு அஞ்சலி செலுத்தும். பின்னர் மணிக்கூட்டுக் கோபுர வீதி, வைத்தியசாலை வீதி வழி யாக ஏ9 வீதியை அடைந்து செம்மணி சந்திவரை கால்நடையாகச் செல்லும்.

அங்கிருந்து வாகனங்களில் பேர ணியின் பயணம் தொடங்கும். நாவற் குழி, சாவகச்சேரி, கொடிகாமம், மிருசு வில், பளை, ஆனையிறவு, பரந்தன் ஊடாக முதல் நாள் மலை கிளிநொச் சியை சென்றடையும் பேரணி இரணை மடுவில் நிறைவுறும்.

இரண்டாம் நாள் பேரணி ஞாயிற் றுக்கிழமை காலை 9 மணிக்கு பரந்த னில் இருந்து தொடங்கும். வவுனியா மற்றும் மன்னாரிலிருந்து கிளிநொச் சியை வந்தடையும் பேரணிகளையும் இணைத்துக் கொண்டு முல்லைத்தீவு நோக்கி புறப்படும்.

புளியம்பொக்கணை, தர்மபுரம், விசுவமடு, உடையார்கட்டு, மூங்கிலாறு ஊடாக புதுக்குடியிருப்பை வந்தடையும் பேரணி அங்கிருந்து முள்ளிவாய்க்கால் முற்றத்துக்குச் சென்று அஞ்சலிசெலுத் தும். பேரணியின் இரண்டாம் நாள் முல்லைத்தீவில் நிறைவடையவுள்ளது.

மூன்றாம் நாள் பெப்ரவரி 6ஆம் திகதி காலை 7.30 மணிக்கு முல்லைத் தீவிலிருந்து பயணத்தைத் தொடங்கும் பேரணி திருகோணமலை மாவட்டத் தின் தென்னமரவாடி ஊடாக திருகோண மலையை நகரை மதியம் 1.30 மணி யளவில் வந்தடையும். பேரணியின் மூன்றாம் நாள் வெருகலில் நிறைவு பெறும்.

நான்காம் நாள் பெப்ரவரி 7ஆம் திகதி காலை 10 மணிக்கு வெருகலி லிருந்து தொடங்கும் பேரணி வாகரை சென்று அங்கிருந்து மட்டக்களப்பு நகரை வந்தடையும். அதேநேரம் அம் பாறை மாவட்டத்திலிருந்தும் பேரணி யாக மக்கள் மட்டக்களப்பை வந்தடை வார்கள். அங்கு நடைபெறும் இறுதிப் பொது கூட்டத்துடன் பேரணி நிறைவு பெறும்.

## 13ஆவது திருத்தச் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டின் சுயாதீனத்தன்மை, ஒரு மைப்பாடு, தேசிய பாதுகாப்பு தொடர்பில் பாரிய சிக்கல்களைத் தோற்றுவிக்கும் 13 ஆவது திருத்தச் சட்டத்தை, எந்த வகையிலும் அமுல்படுத்தக்கூடாது என்று அந்தக் கடிதத்தில் வலியுறுத்தப் பட்டுள்ளது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையைப் பயன்படுத்தி அரச மைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்து வேன் என்று கடந்த சர்வகட்சிக் கூட்டத் தின் போது ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க தெரிவித்த கருத்து தெற்கு அரசிய லில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள் ளது.

இந்த நிலையிலேயே 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த வேண் டாம் என்று வலியுறுத்தி மகாநாயக்க தேரர்களும் கடிதம் எழுதியுள்ளனர்.

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங் கள், புராதன, வரலாற்று சின்னங்கள், மத அமைப்புகளை ஒழுங்குபடுத்தும் அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்குவதன் மூலம் நாட்டில் பிரிவி னைவாதத்தை ஏற்படுத்துவதற்கான சந்தர்ப்பம் உருவாகும் என்று மகாநா யக்க தேரர்கள், ஜனாதிபதிக்கு அனுப்பி யுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

நாட்டில் ஏற்படக்கூடிய சிக்கல், பாத கமான நிலையைக் கருத்தில்கொண்டே, ஏற்கனவே ஜனாதிபதி பதவியை வகித் தவர்கள் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்து வதைத் தவிர்த்தனர் என்றும் மகாநா யக்க தேரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மக்களின் இறைமையைப் பாதுகாக் கும் பொறுப்புள்ள நிறைவேற்று அதி கார ஜனாதிபதி, மத்திய அரசின் இறை மையைச் சீர்குலைக்கும் இத்தகைய அரசமைப்பு திருத்தத்தை நடைமுறைப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின் றமை, மக்கள் மத்தியில் அதிருப்தி ஏற் படுவதற்குக் காரணமாக அமையும் என்றும் மகாநாயக்க தேரர்கள் தெரி வித்துள்ளனர்.

நாட்டில் நிலவுகின்ற பொருளாதர நெருக்கடியால் பிராந்திய, உலக வல்லர சுகளின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள் வதற்கான சில நிபந்தனைகளுக்கு இணக்கம் தெரிவிக்குமாறு அழுத்தம் பிரயோகிக்கப்பட்டாலும், நாட்டின் ஒரு மைப்பாடு, சுயாதீனத் தன்மையை விபத்தில் ஆழ்த்தும் இத்தகைய பிரேர ணைகளை நிராகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மகாநாயக்க தேரர்கள், ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

## மகாநாயக்க ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதலில் மல்வத்து மகா விகாரைக்கு விஜயம் செய்த ஜனாதிபதி அங்கு, வணக்கத்துக்குரிய திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல மகாநாயக்க தேரரைச் சந்

(10ஆம் பக்கம் பார்க்க)




காலைக்கதிர் Kalaikkathir

**'காலைக்கதிர்' பத்திரிகையில் கீழ்வரும் வெற்றிடங்க ளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

1. உதவி ஆசிரியர்
2. பக்க ஒப்புநோக்குநர்
3. பக்கவடிவமைப்பாளர்
4. செய்தியாளர்கள்
5. இத்துறைகளில் பயிற்சி பெற விரும்புவோர்களும் தொடர்புகொள்ளலாம்.

**தொடர்புகளுக்கு -077 307 8799**





# சுதந்திர தின நினைவாக முத்திரை மற்றும் நாணயம்

## ஜனாதிபதியிடம் நேற்று கையளிப்பு

75 ஆவது தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு இலங்கை தபால் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள நினைவு முத்திரை மற்றும் இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்டுள்ள விசேட நினைவு நாணயம் என்பவற்றை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று (வியாழக்கிழமை) முற்பகல் கண்டி ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றது.

நினைவு முத்திரையை வெகுசன ஊடக, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்தனவும் நினைவு நாணயத்தை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கையளித்தனர்.

தபால் திணைக்களத்தின் பாரம்பரிய நடவடிக்கைகளுக்கு அமைவாக 50 ரூபா பெறுமதியுடன் வெளியிடப்பட்டுள்ள இந்த நினைவு முத்திரை மற்றும் அதன் முதல் நாள் கடித உறை என்பன இன்று முதல் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து தபால் நிலையங்களிலும் உப தபால் நிலையங்களிலும் விற்பனை செய்யப்படும்.

அத்துடன் கண்டி, திருகோணமலை, குருநாகல், காலி மற்றும் நீர்கொழும்பு ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ள விசேட முத்திரை கருமபீடங்கள் ஊடாக இந்த நினைவு முத்திரை மற்றும் முதல் நாள் கடித உறையை கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகளை இலங்கை முத்திரைப் பணியகம் மேற்கொண்டுள்ளது.

75 ஆவது தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு இலங்கை தபால் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்டள்ள முத்திரை கண்காட்சி மற்றும் அருங்காட்சியக கண்காட்சி என்பன பெப்ரவரி 6 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரை கொழும்பு 10 டி.ஆர். விஜேவர்தன மாவத்தையில் அமைந்துள்ள தபால் தலைமையக வளாகத்தில் நடைபெறவுள்ளது.

75 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு வெளியிடப்பட்டுள்ள 1000 ரூபா பெறுமதியுள்ள நினைவு நாணயம் புழக்கத்திற்கு விடப்பட மாட்டாது என்பதோடு, இது இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட 71 ஆவது நினைவு நாணயம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த நினைவு நாணயத்தில் '75' என்ற எண் பெரிதாக காட்டப்பட்டுள்ளதோடு இலங்கையின் தேசியக் கொடியை உயர்த்திப் பிடித்துள்ள மாதிரிவடிவம் ஒன்றும் அதன் மையத்தில் பதிக்கப்பட்டுள்ளது. நாணயத்தைச் சுற்றி ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில்'சுதந்திரக் கொண்டாட்டம்' என்ற வாசகம் குறிப்பிடப்பட்டுள்ளது. நாணயத்தின் கீழ் பகுதியில் '1948 – 2023' ஆண்டு குறிப்பிடப்பட்டுள்ளது.

நாணயத்தின் மறுபுறம் மையத்தில் அதன் பெறுமதி '1000' என பெரிய எண்களில் காட்டப்பட்டுள்ளது. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் 'ரூபா' என்ற வார்த்தைகள் முகப்பகுதியின் கீழேயும் இலங்கையின் அரச சின்னம் முகப்பகுதியின் மேலேயும் பொறிக்கப்பட்டுள்ளன. நாணயத்தின் மேல் பகுதியில் ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் 'இலங்கை' என்ற வார்த்தை உள்ளது.

வெகுசன ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, வெகுசன ஊடக அமைச்சின் செயலாளர் அனு பெல்பிட, பதில் தபால் மா அதிபர் எஸ்.ஆர்.டபிள்யு.எம்.ஆர்.பி. சத்குமார, பிரதி தபால் மா அதிபர் (நடவடிக்கைகள்) ராஜித கே. ரணசிங்க, பிரதி தபால் மா அதிபர் (மத்திய மாகாணம்) சமீசா டி சில்வா, முத்திரைப் பணியகத்தின் பணிப்பாளர் லங்கா டி சில்வா, சிரேஷ்ட பிரசார அதிகாரி சன்ன முனசிங்க உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.



காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மாகாநாயக்கர்களை மீறும் துணிச்சல் இருக்கிறதா?

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கான எதிர்ப்பு தெற்கில் வலுக்கத் தொடங்கியிருக்கிறது. எதிர்பார்க்கப்பட்ட படியே மாகாநாயக்க தேரர்கள் இதற்கான தமது எதிர்ப்பைப் பதிவு செய்திருக்கிறார்கள். 13 முழுமையாக நடைமுறைப்படுத்தப்படக்கூடாது என்று அவர்கள் அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் வலியுறுத்தியிருக்கிறார்கள்.

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள், புராதன, வரலாற்று சின்னங்கள், மத அமைப்புகளை ஒழுங்கு படுத்தும் அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்குவதன் மூலம் நாட்டில் பிரிவினைவாதத்தை ஏற்படுத்துவதற்கான சந்தர்ப்பம் உருவாகும் என்பது மகாநாயக்க தேரர்கள் அரச தலைவருக்கு விடுத்துள்ள எச்சரிக்கை.

மக்களின் இறைமையைப் பாதுகாக்கும் பொறுப்புள்ள நிறைவேற்று அதிகார அரச தலைவர், மத்திய அரசின் இறைமையைச் சீர்குலைக்கும் இத்தகைய அரசமைப்பு திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றமை, மக்கள் மத்தியில் அதிருப்தி ஏற்படுவதற்கான காரணமாக அமையும் என்றும் மகாநாயக்க தேரர்கள் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் நிலவுகின்ற பொருளாதர நெருக்கடியைப் பயன்படுத்தி பிராந்திய, உலக வல்லரசுகளின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதற்காகச் சில நிபந்தனைகளுக்கு இணக்கம் தெரிவிக்குமாறு அழுத்தம் கொடுக்கப்பட்டாலும், நாட்டின் ஒருமைப்பாடு, சுயாதீனத் தன்மையை விபத்தில் ஆழ்த்தும் இத்தகைய நடவடிக்கைகளை நிராகரிக்க வேண்டும் என்றும் மகாநாயக்க தேரர்கள், ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் வலியுறுத்தியிருக்கிறார்கள்.

மாகாநாயக்கர்களின் செய்தி மிகத் தெளிவானது. பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்கிறேன் என்று கூறிக்கொண்டு, அதற்காக இந்தியா மற்றும் அமெரிக்காவின் அழுத்தங்களுக்குப் பணிந்து 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நிறைவேற்றக் கூடாது என்பதுதான் அந்தச் செய்தி.

கடந்த வாரம் தான் கூட்டிய அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இதுபோன்று 13ஐ நடைமுறைப்படுத்தக்கூடாது என்று கூறிய நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர போன்றவர்களிடம், வீறாப்பாக "அப்படியானால் 22ஆவது திருத்தத்தைக் கொண்டு வந்து 13ஐ இல்லாது செய்யுங்கள். அப்படி இல்லையென்றால் நான் நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துவேன்" என்று சொல்ல முடிந்த அரச தலைவரால் மாகாநாயக்கர்களிடம் அதே தொனியில் இல்லையென்றாலும் அதே கருத்தைச் சொல்ல முடியவில்லை.

இதுதான் இலங்கையின் யதார்த்தம். நாட்டில் அனைத்து மக்களுக்குமான சம நீதியைத் துணிந்து நிலைநாட்ட முடியாத எந்தவொரு தலைவராலும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. அதனால் தான் ரணிலின் தீர்வு முயற்சிகள் ஒவ்வொன்றிலும் தமிழ் மக்கள் தொடர்ந்தும் சந்தேகம் கொண்டிருந்தனர். இந்த முயற்சிகள் அனைத்தும் பன்னாட்டுச் சமூகத்தை ஏமாற்றி இலங்கையின் நலன்களை அடைவதற்கான வேடம் என்று தமிழர்கள் கருதுகின்றனர்.

தமிழர்களின் எண்ணம் பொய்யென நிரூபிப்பதாயின் இப்போது மாகாநாயக்கர்களை மீறி அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நிறைவேற்ற வேண்டும். அதற்கான துணிவு இருக்கிறதா ரணிலுக்கு?

## சாவகச்சேரியில் ஆலயம் உடைத்து நகை, பணம், அரிசி மூடை திருட்டு

தென்மராட்சி, பெப். 3



சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு அண்மையில் உள்ள ஆலயம் மற்றும் வாகனம் திருத்தும் நிலையம் ஆகியவற்றை உடைத்து புதன்கிழமை இரவு பல இலட்சம் ரூபாய் பணம் மற்றும் நகைகள் திருடப்பட்டுள்ளன.

கடும் மழை பெய்துகொண்டிருந்த நேரத்தில் இந்தத் திருட்டு இடம்பெற்றிருப்பதாக சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்தனர். காளி கோவிலில் ஒன்றரைப் பவுண் நகைகள், 35 ஆயிரம் ரூபாய் பணம், அரிசி மூடைகள், கற்பூரப் பெட்டிகள் மற்றும் உண்டியல் பணம் ஆகியன திருடப்பட்டிருக்கின்றன.

ஆலயத்திற்கு பக்கத்துக் காணியில் உள்ள மோட்டார் சைக்கிள் திருத்தும் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த நான்கரை இலட்சம் ரூபாய் பணமும் திருடப்பட்டிருப்பதாகச் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. வாகன திருத்துமிடத்தில் அதன் உரிமையாளர் உறங்கிக்கொண்டிருந்த சமயத்திலேயே குறித்த திருட்டு நூதனமான முறையில் இடம்பெற்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முறைப்பாட்டின் அடிப்படையில் தடவியல் பொலிஸார் மற்றும் சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## மிருசுவிலில் கத்திக்குத்து இளைஞர் காயம்

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மிருசுவிலில் புதன்கிழமை இரவு இடம்பெற்ற கத்திக் குத்தில் இளைஞர் படுகாயமடைந்தார்.

வர்த்தக நிலையம் ஒன்றில் வைத்து அவர் கத்தியால் குத்தப்பட்டார். பாலாவியைச் சேர்ந்த 26 வயதான இளைஞர் இதில் காயமடைந்தார். இரு கைகளிலும் கத்திக் குத்துக் காயங்களுக்கு இலக்கான அவர், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். குறித்த சம்பவம் தொடர்பில் கொடிகாமப் பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

## புற்று நோய்க்கான மருந்துகளை கொண்டுவர 6 மாதங்கள் ஆகும்

புற்று நோயாளர்களுக்கான சிகிச்சைக்காக உலக சுகாதார ஸ்தாபனத்திடம் இருந்து பெறப்படவுள்ள மருந்துகள் மேலும் ஆறு மாதங்களுக்குத் தாமதமாகும் என தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டு பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் இானி பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மருந்துகளை வாங்குவதற்கான கொள்முதல் நடவடிக்கைகளுக்கு கால அவகாசம் தேவைப்படுவதே இதற்குக் காரணம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், வைத்தியசாலைகளில் புற்றுநோய்க்கான மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, மார்பக புற்றுநோய் மற்றும் தைராய்ட் புற்றுநோய் மற்றும் நுரையீரல் புற்றுநோயை எளிதில் குணப்படுத்த முடியும் எனவும் வைத்தியர் இானி பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

முக்கிய மார்பக புற்றுநோயை முன்கூட்டியே கண்டறியும் மையம் நாரஹேன்பிட்டியில் உள்ளதாகவும் இரத்தினபுரி, யாழ்ப்பாணம் மற்றும் மாத்தறை வைத்தியசாலைகளில் புற்றுநோயை முன்கூட்டியே கண்டறியும் சிகிச்சை நிலையங்கள் உள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியில் குருதித் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் அனைத்து குருதி வகைகளுக்கும் தட்டுப்பாடு நிலவுவதாக யாழ். போதனா வைத்தியசாலை தெரிவித்துள்ளது.


இதனால் நோயாளர்களுக்குத் தேவையான குருதியை வழங்க முடியாமையால் அடுத்த இரத்ததான முகாம் எதிர்வரும் 4 ஆம் திகதியே நடைபெறவுள்ளதாகவும், அதுவரை நோயாளர்களுக்கான குருதியை வழங்க போதாமை நிலவுவதாகவும் அறிவித்துள்ளது.

எனவே ஏற்கனவே குருதிக்கொடை வழங்கி நான்கு மாதங்கள் பூர்த்தியான குருதிக்கொடையாளர்களும் புதிய குருதிக் கொடையாளர்களும் யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கிக்கு வருகை தந்து இரத்ததானம் செய்து உயிர்காக்கும் பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றனர்.

இது தொடர்பிலான மேலதிக தகவல்களுக்கு 0772105375 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ். இரத்த வங்கி மேலும் தமது அவசர நிலைமையைக் குறிப்பிட்டுள்ளது.

## கேகாலை வீடொன்றில் இருந்து 2 சகோதரிகள் சடலங்களாக மீட்பு

### தாய் மயக்கமடைந்த நிலையில் வைத்தியசாலையில்




கேகாலை, தெரணியகல பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் மர்மமான முறையில் உயிரிழந்த இரண்டு பெண்களின் சடலங்களைப் பொலிஸார் நேற்று கண்டெடுத்துள்ளனர்.

51 மற்றும் 49 வயதுடைய இருவரும் சகோதரிகள் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதேவேளை, வீட்டில் இருந்த 90 வயதான அவர்களது தாயார் மயக்கமடைந்த நிலையில் தெரணியகல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.


இந்தச் சம்பவம் தொடர்பில் தெரணியகல பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இரண்டு சடலங்களும் உடற்கூற்றுப் பரிசோதனைக்காகத் தெரணியகல வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

# சுதந்திர தினத்தை முன்னிட்டு இடம்பெற்ற ஒத்திகை நிகழ்வு!







நாட்டின் 75 ஆவது சுதந்திர தின நிகழ்வு கொண்டாட்டத்தை முன்னிட்டு காலிமுகத்திடலில் நேற்று (வியாழக்கிழமையும்) ஒத்திகைகள் இடம்பெற்றன.

இந்த ஒத்திகை நிகழ்வுகளை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் உட்பட முப்படைகளின் பிரதானிகள் பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது.

## சுதந்திர தின நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்காக இந்திய அமைச்சர் முரளீதரன் இலங்கைக்கு விஜயம்!

இந்திய வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் வி. முரளீதரன் இலங்கையின் சுதந்திரதின நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்காக நாளை (சனிக்கிழமை) கொழும்பிற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார் என இந்திய ஊடக மொன்று தெரிவித்துள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் இலங்கையின் சுதந்திரதின நிகழ்வுகளில் இந்தியாவை பிரதிநிதித்துவம் செய்வார் என இந்திய ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

ஒருமாதகாலத்தில் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளும் இரண்டாவது உயர்மட்ட பிரதிநிதியாக முரளீதரன் விளங்கு வார் எனத் தெரிவித்துள்ள இந்திய ஊடகம், இந்தியவெளிவிவகார அமைச்சினின் விஜயம் இலங்கையின் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளிற்கு அவர் ஆதரவு வெளியிட்டதையும் சுட்டிக்காட்டியுள்ளது.

பாக்கிஸ்தான், பங்களாதேஸ், நேபாளம், மாலைதீவு, பூட்டான் ஆகிய நாடுகளின் இராஜாங்க அமைச்சர்களும் சுதந்திரதின நிகழ்வுகளில் கலந்துகொள்ளவுள்ளனர்.

ஜப்பானின் வெளிவிவகார இராஜாங்க அமைச்சரும் இலங்கையின் சுதந்திர தின நிகழ்வுகளில் கலந்துகொள்கின்றார்.

## குருணாகல் மாநகர சபையின் மேயராக மக்கள் சக்தியின் அருணாசாந்த தெரிவு!



குருணாகல் மாநகர சபையின் மேயர் பதவிக்கு ஒருவரை தெரிவு செய்வதற்காக நேற்று (வியாழக்கிழமை) நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் ஐக்கிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தும் சுமேத அருணாசாந்த 4 மேலதிக வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார்.

புதிய மேயர் தெரிவுக்காக போட்டியிட்ட விஜயானந்த வெடிசிங்க ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்திய போதிலும் அவருக்கு 6 வாக்குகளே கிடைத்தன.

சுமேதா அருணாசாந்த 10 வாக்குகளைப் பெற்றார். இதனடிப்படையில் அவர் குருணாகல் மாநகர சபைக்கு தெரிவு செய்யப்பட்ட 17 ஆவது மேயராவார்.




## பத்தரமுல்லையில் நேற்று இருவர் கைது!

### வேறு மூவரின் கடவுச் சீட்டுகளை வைத்திருந்தனராம்

பத்தரமுல்லையில் வேறு நபர்களுக்குச் சொந்தமான கடவுச்சீட்டுகளை வைத்திருந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தலங்கம பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேக நபர்கள் கைது செய்யப்படும் போது, பத்தரமுல்லையில் உள்ள குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் தலைமை அலுவலகத்துக்கு வந்திருந்த மூன்று பேரின் கடவுச்சீட்டுகள் அவர்களிடம் இருந்ததாகக் குறிப்பிடப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட இருவரும் 63 மற்றும் 68 வயதுடையவர்கள் எனவும், அவர்கள் வத்தளை மற்றும் கொழும்பு 11 ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தநிலையில் கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்கள் நேற்று (வியாழக்கிழமை) கடுவெல நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை தலங்கம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ஒன்றாக மது அருந்தியவர் நண்பனின் ஆணுறுப்பை கத்தியால் வெட்டிய நபர்!

### பதுளையில் சம்பவம்

நண்பர் ஒருவருடன் இணைந்து அதிகமாக மதுபானம் அருந்திய நபர் ஒருவர், நண்பரின் ஆணுறுப்பை கூரிய கத்தியால் வெட்டியுள்ளார்.

இதனையடுத்து பாதிக்கப்பட்ட நபர் பதுளை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

55 வயதான குறித்த நபர் வியாலுவ தல்தென பிரதேசத்தை சேர்ந்தவராவார்.

பாதிக்கப்பட்ட நபர் மீகஹகியுல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, பின்னர் பதுளை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இவரின் நிலைமை கவலைக்கிடமாக இல்லை என மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## ரஷ்யப் பெண்ணின் பொருள்கள் மாயம்

இலங்கைக்கு சுற்றுலா பயணம் மேற்கொண்ட ரஷ்யா பெண்ணின் பெறுமதியான பொருள்கள் காணாமல் போயுள்ளன.

தடல்ல கடற்கரையில் நேற்று நீராடச் சென்ற ரஷ்ய பெண் ஒருவரின் சுமார் 6 லட்சம் ரூபா பெறுமதியான அப்பிள் கையடக்கதொலைபேசியும் 3 ஆயிரம் ரூபா அடங்கிய பையையும் ஒருவர் திருடிச் சென்றுள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தடல்ல பிரதேசத்தில் உள்ள ஹோட்டலில் தங்கியிருந்த இந்த வெளிநாட்டுப் பெண் தனது மகளுடன் தங்கியிருந்தார்.

இந்த நிலையில் தான் தங்கியிருக்கும் ஹோட்டலுக்குப் பின்புறம் உள்ள கடலுக்கு குளிக்கச் சென்று திரும்பி வரும் போது பை காணாமல் போயுள்ளது.

உடனடியாக சம்பவம் தொடர்பில் காலி பொலிஸாரிடம் குறித்த பெண் முறைப்பாடு செய்துள்ளார்.

காலி பொலிஸார் மற்றும் கோட்டை சுற்றுலா பொலிஸார் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## காலிமுகத்திடலின் பின் அரசியல் நிலைப்பாடுகள்



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 256

### சிங்கள பேரினவாதத்தின் ஒற்றுமை

தேர்தல் என்ற பேச்சு வந்தவுடன் அதில் இடம் ஒன்று பிடித்து விட வேண்டும் என உற்சாகமாகிவிட்ட அரசியல் வாதிகளைப் பற்றி பேசி, நிகழ்காலத்தையும் அதன் நடப்புக்களையும் பதிவிடுகிறீர்களே, அது பிரயோசனமானதா? தங்கள் பரவணிகளை இவர்கள் மாற்றப் போகிறார்களா? விழலுக்கு இறைத்ததாக தானே இது போகும் என்று பல வாசகர்கள் அபிப்பிராயம் தந்தார்கள். அதனை உணர்ந்து கொள்ளாமல் இல்லை.

'எவ்வளவுதான் எழுதுவது?' என்று சில நாள்களுக்கு முன் வரைந்த பதிவில் 'காலிமுகத்திடல் வரை' என்ற தலைப்பு, திடலை விட்டுக் காலி வரை பயணிக்கும் ரயில் ஆகிறதா என்ற ஆதங்கங்களையும் சுட்டிக்காட்டினேன். நிகழும் பரப்புக்களையோ, சுதந்திர தினத்துக்குப் பின் நிகழக் கூடியவை பற்றியோ ஆராயாமல், வரைவுபடுத்தி, இந்தத் தொடரை முடித்து விட வேண்டும் என்று தீர்மானிக்கிறேன். பல்வேறு சமயங்களில் கேள்விகளாகப்பட்டவைகளின் தொகுப்பாக சிலவற்றை பொழிப்பு போல அலசி விடலாம் எனவும் எண்ணுகிறேன்.

யாழ்ப்பாணத்திலிருந்து காலிமுகத்திடல் வரை வந்தும், தமிழ் மக்களின் இனப் பிரச்சினையின் பார்வை, சிங்கள தரப்புகளினால் எவ்விதம் பார்க்கப் படுகின்றது என்று ஆராய்ந்தால் முதலில் காலிமுகத்திடல் போராட்டமே இனப் பிரச்சினையை ஒட்டியது அல்ல என்பதை கவனிக்க வேண்டும். அது சிங்கள மக்களும், நாடும் எதிர் நோக்கிய நாளாந்த பொருளாதாரப் பிரச்சினையில் எழுந்தது. இதுவரை அரசாட்சி செய்து வந்த அரசியல்வாதிகளாலும், அரசாங்கங்களாலும் நாடு சூறையாடப்பட்டு, அவர்கள் நிர்வகித்த அரசமைப்புச் சட்டங்களின் கீழ், தாங்கள் எதுவும் பொறுப்பு கூற தேவையில்லை என்ற மேதாவிதனத்துடன் பயணிக்கின்றமையால் ஓர் இணைந்த மாற்று சமூகம் உருவாக வேண்டும், அந்த சமூகத்தில் யாவரும் சமத்துவமாக உரிமைகள் பெற வேண்டும் என்ற சித்தாந்தமே அதில் இருந்தது.

மாற்றுச் சமுதாயம் உருவாக மாற்று வழிமுறைகள் (System Change) வர வேண்டும் என்று போராடினார்கள். ஆட்சியில் இருந்தவர்கள், பதைபதைத்தாலும் பின்னர் சுதாகரித்து, அதனை அடக்கி, சற்று கரடு முரடாக இருந்தாலும், அதிகாரத்தில் பயணிக்கிறார்கள். பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்ட மாணவர் ஒன்றிய தலைவர் வசந்த முதலிகே தங்களது போராட்டங்கள் அடக்கப்பட்டன, ஆனால் அவை தொடரும் என்கிறார். அவை தொடர்ந்தாலும் இனப் பிரச்சினைக்கு தீர்வு அவர்களது பார்வையில் கூட 'ஒற்றை ஆட்சியில் சமத்துவம்' என்பதுதான்.

தற்சமயம் பொருளாதார நெருக்கடியாலும் சர்வதேச அழுத்தத்தினாலும், மக்கள் தேர்வினால் நியமனம் பெற்றவர் இல்லாவிடினும், சட்ட ரீதியாக ஜனாதிபதி பதவியில் இருக்கும் ரணில், சுதந்திர தினத்திற்கு முன் எல்லா மக்களும் ஏற்றுக்கொள்ளக் கூடியதான தீர்வு ஒன்றை தருவேன் என்கிறார். அதில் சர்வதேச அழுத்தம் என்பது என்ன?

சர்வதேசம் அடிப்படையில் அமெரிக்காவின் அணியில் இருக்கும் மேலைத்தேய நாடுகள், மற்றது பிராந்தியத்தில் மேலாண்மையில் உள்ள இந்தியா. அந்த இந்தியா கூட தற்சமயம் பிராந்திய புவியியல் நிலையில் அமெரிக்கா சார்பாக அணி சேர்ந்துள்ளது. இவை இரண்டினதும் நோக்கம் ஸ்ரீலங்காவை அரசியல், பொருளாதார ரீதியில் அழுத்தி அதனை சீனாவினது அதிகாரப் பிடிகளில் இருந்து விலக்குவது என்பதுதான். புவியியல் அரசியல் எதிர்பார்ப்புகளுக்கு மாறாக, அவை மாற்றமடைந்தாலே ஒழிய, இந்த இரு நாடுகளும், ஸ்ரீலங்காவில் பிரிவினையை ஏற்படுத்தி, வரக்கூடிய பிரிவுகளால் சில பகுதிகள் சீனாவுடன் இணைந்து கொண்டு பிராந்தியத்தில் தங்களுக்குத் தலையிடி தரும் நிலையை ஏற்படுத்த விரும்பவில்லை. ஆதலால் தமிழ் மக்கள் தங்களது பிரிவினை அன்றில் இறைமையின் மீட்பு என்ற எண்ணங்களுக்கு தற்சமயத்தில் ஆதரவு இல்லை என்ற யதார்த்தத்தில் தான் இயங்க வேண்டும். இந்த சர்வதேச ஒழுங்கு நியதியை மீறி, அவர்கள் அதற்கு மேல் பறந்து, வைகுண்டோம் போவோம் என்றால், 'கோவிந்தா! கோவிந்தா!!' என்று கூவிக் கொண்டே இருக்க வேண்டியதுதான்.

அமெரிக்கா, இந்தியா இரண்டுமே மனித உரிமை பேரவையில் கூட 13 ஆம் திருத்தச் சட்டத்தை முழுமையாக அமல்படுத்த வேண்டும் என ஸ்ரீலங்காவை நிர்ப்பந்திக்கின்றன. அதனை தமிழ் பிரதிநிதிகளுக்கும் அவை தெளிவாக்கி உள்ளன.

13 ஆம் திருத்தச் சட்டத்தை முழுமையாக அமல்படுத்த இன்றைய நிலையில் – காலிமுகத்திடல் போராட்டங்களின் பின் – ரணிலுக்கு சஜித் பிரேமதாஸா மற்றும் மஹிந்தவின் வெளிப்படையான ஆதரவுகள் உண்டு. மொட்டில் இருந்து பிரிந்த ஜி.எல்.பீரிஸ், டலஸ் அழகப்பெருமா போன்றோர் கூட அந்த நிலைப்பாட்டில்தான் இருக்கிறார்கள். 1987 இல் இதே 13 ஆவது திருத்தத்துக்கு எதிராக இரத்தக்களரிகளை ஏற்படுத்திய ஜே.வி.பி. தாங்கள் அதன் அடிப்படையில் அமைந்த மாகாண சபை முறைக்கு ஆதரவு தருவோம் என அறிவித்துள்ளார்கள். அப்படி இருந்தும் ரணில் தயக்கங்களையே காட்டியவர். தற்சமயம் அமெரிக்காவின் பிரதிச்செயலாளர் விக்ரோரியா நூலண்ட் அவரைச் சந்தித்த போது 13ஆம் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவேன் என வாக்களித்திருக்கிறார். அவர் தயக்கம் காட்டும் காரணம் ஆளுமை கொண்டதான தற்சமயம் தான் தங்கியுள்ள இராணுவ பகுதிகளின் எதிர்ப்பு மட்டும்தான்.

சிங்கள தரப்புகளுக்கு இடையே உள்ள பேரினவாதிகளான விமல் வீரவன்ஸ, சரத் வீரசேகர, பௌத்த பீடங்கள் போன்ற தரப்புகள் 13 அமுலாக்கத்திற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். ஆதரவு தரப்புகள் கூட 13 ஆம் திருத்தத்துக்கு மேலே போகத் தயார் இல்லை. ரணில் கூட தான் சமஷ்டிக்கு ஆதரவானவர் அல்லர் என அறிவித்துள்ளார். சிங்கள பேரினவாதத்தில் ஒற்றுமையான நிலை – அதுவும் சர்வதேச அழுத்தங்களினால் – 35 வருடங்களுக்கு முன் – அதே நிலையில் ஏற்கப்பட்டதை அமுலாக்க இணங்குவது தான்.

சரி, தமிழ் மக்கள் என்ன நிலையில் இதனை அணுகுகிறார்கள்?

### தமிழ் மக்களின் அணுகுமுறைகளும் அவலங்களும்

தமிழ் மக்கள் தங்களது அணுகுமுறைகளை வட்டுக் கோட்டைத் தீர்மானம் வரை அரசியல்வாதிகளிடமே விட்டு, பின்னர் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்தவர்களிடம் கையளித்து, அதன்பின்பு ஆயுதப்போராட்டம் அழித்து அடக்கப்பட்ட பின், எஞ்சியிருந்த அரசியல்வாதிகளிடம் தந்து, அவர்களின் கடந்த 13 ஆண்டுகளில் எவ்வித முன்னேற்றங்களையும் அடையாமல், பொருளாதார வீழ்ச்சியில் சிங்களத் தரப்பை வழிக்குக் கொண்டு வரலாம் என்ற நப்பாசையில் இப்பொழுது தேர்தல் கோலாகலங்கள் தொடங்கியவுடன் தங்களது தனிப்பட்ட கட்சி கொள்கைகளை முன்னெடுத்து, ஆயுதம் தூக்கிப் போராடியவர்கள் அரசியலை முன்னெடுப்பதா அல்லது இரத்தக்கறை படியாத வெள்ளை வேட்டிக்காரர்கள் எனத் தம்மைக் கூறிக் கொள்பவர்கள் அதனை செய்வதா என்று போட்டிகள் ஏற்பட்டுள்ளன.

ஆனால் எதனைத் தமிழ் மக்களுக்காக முன்னெடுக்க வேண்டும் என்பதில் ஒத்தகருத்து இல்லை. காலி முகத்திடலின் பின்னரும் சிங்கள பேரினவாதம் ஒரே சிந்தனையில், ஒரே நோக்கில் இருக்கிறது. தமிழர் அரசியலோ பிரிந்து நின்று பிரிந்தே செயல்படுகிறது – அதுவும் தங்களையே அழித்துக் கொள்ள போர்க்காலத்தில் அப்பொழுது இயங்கிய கூட்டமைப்பு அரசியல் ரீதியாக செயற்பட்டது குறைவு. போரின் முடிவு வரை விடுதலை புலிகளே போரையும் அரசியலையும் நடத்திய படியால் கூட்டமைப்பின் அரசியல் தலைவர்கள் ஏனோதானோ என்று இருந்தவர்கள்தான். யதார்த்தமான முறைகளிலும் பணிகளிலும் தமிழ் மக்களுக்கு எதிரான அட்டூழியங்களையும் மனித உரிமை மீறல்களையும் வெளிக்கொணர்ந்தவர்கள் தமிழ் மக்களின் சிவில் சமூக அமைப்புகளைச் சார்ந்தோர்தான். இவர்கள் காலம் சென்ற மன்னார் ஆயர் ராயப்பு யோசப்பின் தலைமையிலும் ஆளுமையிலும் இயங்கினார்கள். போரின் முடிவில் மஹிந்த தமிழ் கூட்டமைப்பினரை சந்திக்க அழைப்புக்கள் தந்த போது, அவர்கள் சந்திப்பை மேற்கொள்ளும் முன்னரும், சந்திப்புகள் தொடர்ந்த காலங்களிலும், சிவில் அமைப்புகளின் கலந்தரையாடலுடனும் சிவில் சமூகத்தின் ஏற்படனும்தான் தீர்வுக்கான தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என வற்புறுத்தப்பட்டது. சிவில் சமூகத்துடனும் கலந்துரையாட சம்மதித்தாலும், பேச்சுக்களின் தீர்மானங்கள் அரசியல்வாதிகளின் கைகளில் விடப்பட வேண்டும் என்று சம்பந்தன் வைத்த நிபந்தனைகளில் சிவில் சமூகங்களின் பங்கும் குறைந்து, ஆயர் ராயப்பு ஜோசப்பின் மறைவுக்குப் பின் அவை மேலும் தள்ளந்து விட்டன.

தீர்வுக்கான முன்னெடுப்புகள் கூட தீர்வுகள் பற்றிப் பேசுவதிலேயே கழிந்தன. ஆகவே தமிழ் மக்கள் தங்களுக்கு நிதர்சனமான தீர்வுகளை ஏற்படுத்தி முன்னேற அவற்றுக்கான தீர்மானங்களை மேற்கொள்ள அரசியல் வாதிகளிடம் மட்டும் பொறுப்பை விட்டு விடாமல், சிவில் சமூகங்கள் பாரிய பொறுப்பினை ஏற்று, பொதுக் கருத்துக்களை உள்ளடக்கப்படுத்தி, அவற்றை நடைமுறைப்படுத்தக் கூடிய ஆளுமைகளைப் பெற வேண்டும். அன்றில், வரும் சுதந்திர தினத்தின் பின்னும் 'இந்தியாவின் முகவர்கள்', 'ஒட்டுக் குழுக்கள்', 'துரோகிகள்' என்ற பேச்சுக்களிலேயே காலம் கழியும்.

ஏனெனில் தற்பொழுது தீர்வை யொட்டி எடுக்கப்படும் தீர்மானங்களை கட்சிகளும் தலைவர்களும் தன்னிச்சையாகத் தங்களுக்காக எடுத்து வெளிப்படுத்துவதைக் காணக் கூடியதாக இருக்கிறது. ஆளுமைகளை வெளிப்படுத்தி, யதார்த்தத்துடனும், ஆணித்தரத்துடனும் பணியாற்றும் சிவில் கட்டமைப்புகளும் அதற்கான அர்ப்பணிப்புகளுடன் வெகுவிரைவில் பொதுவெளியில் இயங்கி, மக்களை வழிகாட்டி நடக்காத வரையில், அவர்கள் சூனியத்தை நோக்கியே பயணிப்பார்கள்.

வழிநடத்தும் சிவில் சமூகங்கள் தமிழ் மக்களுக்காக ஏற்படுத்த வேண்டிய அடித்தளம் என்பதை அடுத்துப் பார்ப்போம்.

ஏனெனில் விடுதலைப்புலிகள் பார்த்துக் கொள்வார்கள், பின் அவர்கள் உருவாக்கிய கூட்டமைப்பு பார்த்துக் கொள்ளும் என்று வாளாவிருந்த நிலையை மாற்றுதல் அவசியம்.

(வளரும்....)


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

# பிள்ளை இல்லாத வீட்டில்...

## அக்கரை அக்கறை அலசல்



என்.சத்தியமூர்த்தி

நாளை, பெப்ரவரி நான்காம் திகதி அரங்கேற இருக்கும், நாட்டின் 75 ஆவது சுதந்திர தின வைபவங்களை புறக்கணிப்பதாக சில தென்னிலங்கை கட்சிகள் அறிவித்துள்ளன. பொருளாதார நெருக்கடிகளுக்குள், விமரிசையான இந்த வைபவங்கள், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைக்கு விளம்பரம் தேடுவதற்காக மட்டுமே நடத்தப்படுகிறது என்பது அவர்களது வியாக்கியானம். அது சரியான அணுகுமுறைதானா, என்ற கேள்வி எழுந்துள்ளது. இரண்டையுமே நியாயப் படுத்துவோர் உள்ளனர். ஆனால், இரண்டுமே, ஓரளவிற்கு மட்டுமே உண்மை.

இந்தப் பின்னணியில், அனைத்து தமிழர் கட்சிகளும் சுதந்திர தினத்தை கறுப்பு தினமாக அனுஷ்டிக்கப் போவதாக அறிவித்துள்ளன. அதற்கு அவர்கள் கூறும் காரணமும் கிட்டத்தட்ட ஒன்றேதான். ஆனால், தனித்தனியே அவர்கள் அதனை அறிவிப்பது, அவர்களிடையே தொடர்ந்து நிலவி வரும் ஈகோ பிரச்சினைகளையே மீண்டும் வெளிக்கொண்டு வந்துள்ளது. காய்சலுக்கு மருந்துண்டு, ஆனால், கர்வத்திற்கு மருந்தே இல்லை.

அதுவும், மீண்டும், மீண்டும் எதிரே நிற்கும் சிங்களம் மற்றும் ஆட்சியாளர் தரப்புகளில் இருந்து, இவர்கள் போராடும் இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து தொடர்ந்து எதிர்ப்பு வரும் போது, தமிழர் தரப்பின் போக்கு வருத்தப்படவேண்டிய விடயம். உதாரணத்திற்கு, தற்போது, அனைத்து தமிழ் கட்சிகளுமே சமஷ்டி குறித்து பேசுகின்றன. பின்னர், ஏன் இந்த நான் பெரியவனா, அல்லது நீ பெரியவனா, என்ற சித்து விளையாட்டு?

தமிழ், சிங்களம் என்ற இந்த இரு தரப்பினரும் இப்படி அடித்துக்கொண்டும், பிடித்துக்கொண்டும், சுதந்திர தினத்தை புறக்கணிப்பதன் முக்கிய காரணம், அவர்கள் கூறுவது அல்ல. மாறாக, மார்ச் 9ஆம் திகதி நாடு தழுவிய உள்ளூராட்சித் தேர்தல்கள் நிகழ்ந்தே விடும் என்ற நம்பிக்கையும், எதிர்பார்ப்பும்கூட அவர்களை இவ்வாறு செய்ய தூண்டியுள்ளது என்பதே உண்மை. அண்மையில் தேர்தல் இல்லையென்றால், அவர்கள் இவ்வாறெல்லாம் செயல்படுவார்களா, என்பது தனியாக விவாதிக்கப்படவேண்டிய விடயம்.

### நிதர்சனமான உண்மை

இதில் பிரச்சினைக்குரிய விடயம், தமிழர் தரப்பு, சுதந்திர தினத்தை கறுப்பு தினமாக அறிவித்தமைதான். காரணம், சிங்களவர்கள், தங்களுக்குள் அடித்துக்கொள்வது, கொள்கை ரீதியான காரணங்களினால் அல்ல. அவை தேர்தல் ரீதியான காரணங்களினால் மட்டுமே. அவர்களில் சிலர் சுதந்திர தின விழாவை புறக்கணிப்பதற்கு கூறும் காரணத்தை, ஆளும் தரப்பினரில்கூட சிலர் ஏற்றுக்கொள்ளலாம்.

ஆனால், தமிழர்கள் அதனையே கறுப்பு தினம் என்று கூறி பகிஷ்கரிப்பது, அவர்களில் இரு தரப்பினருக்குமே, நாட்டின் கௌரவம் மற்றும் இறையாண்மை குறித்த விடயம்.

இல்லையென்றால், தமிழர் தரப்பினரில் ஒரு சாரார் வரிந்து கட்டிக் கொண்டு கடந்த ஜனாதிபதி தேர்தலில் ஆதரவளித்த சஜித் பிரேமதாச, சுதந்திர தினத்தை புறக்கணிப்பதற்கு தனியான ஒரு காரணத்தை கண்டு பிடித்திருப்பாரா? ஜனாதிபதி ரணில், சுதந்திர தினத்திற்கு முன், இனப்பிரச்சினைக் குத்தீர்வு திட்டத்தை அளிப்பேன் என்று தானாகவே அறிவித்துவிட்டு, அதனை நடைமுறைபடுத்தவில்லை, என்பதை யல்லவா, சஜித் காரணமாக கூறியிருக்கவேண்டும்?

அது போன்றே, இதற்கு முன்னர், தீர்வுத் திட்டம் குறித்து விவாதிக்க ஜனாதிபதி அழைப்பு விடுத்த அனைத்து கட்சிக் கூட்டத்தையும் புறக்கணிக்காது சஜித் வகையறா, அதில் பங்கு பெற்றிருக்க வேண்டாமா? ஏன், முந்தைய நாடாளுமன்றத்தில், தமிழ் தேசியக் கூட்டமைப்பு அதிகாரபூர்வ எதிர்கட்சியாக அங்கீகரிக்கப்பட்டதும், அதன் தலைவர் சம்மந்தன், எதிர்கட்சிகளின் கொறடா பதவியை தாமாகவே மனமுவந்து அளித்த ஜேவிபி தலைமையும் அவ்வாறல்லவா செய்திருக்க வேண்டும்? ஆனால், அவர்கள் தாங்கள் சார்ந்த சிங்கள இனத்தின் உள் வீட்டு அரசியலிலேயே முனைப்பாக இருந்தனர். தொடர்ந்தும் அவ்வாறே இருந்து வருகின்றனர்.

இதுவே, கடந்த முப்பது முதல் ஐம்பதுக்கும் மேலான ஆண்டுகளில் மீண்டும் மீண்டும் நிரூபிக்கப்பட்டு வரும் நிதர்சனமான உண்மை. அதனால் தான், அண்மையில், தானே எதிர் பாராத, மேலும் விரும்பாத உள்ளாட்சி தேர்தல் வரும் காலகட்டத்தில், ரணில் தான் வரைந்த காலகட்டத்தினுள், தான் அறிவித்த தீர்வு திட்டத்தை அறிக்க வில்லை என்றே கருதவேண்டும். அல்லது பதிமூன்று மட்டும் தானா, அவர் தீர்வு திட்டம்?

### பதிமூன்று இங்கே...

இதற்கு இடைப்பட்ட காலத்தில், பதிமூன்று சார்ந்த தீர்வு திட்டத்தை முழுமையாக செயல்படுத்தப் போவதாக ரணில் அறிவித்தார். அதற்காக, மந்திரிசபையும் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது என்பதையும் அவர் குறிப்பிட்டார். இதனையே, அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த இந்தியாவின் அயலுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கும் கூறியிருந்தார். அதனைத் தொடர்ந்து கொழும்பு வந்த அமெரிக்க அதிகாரி விக்டோரியா நூலண்ட் அம்மையாரிடமும் அதனையே தெரிவித்துள்ளார்.

தமிழர் தலைமைகள் உண்மையிலேயே தங்களுக்குத் தாங்களே சர்டிபிகேட் கொடுத்துக்கொள்ளுவது போல் அறிவாளிகளாக இருந்திருந்தால், கிடைத்ததைப் பிடித்துக்கொண்டு, அதிலிருந்து முன்னேறியிருக்க வேண்டும். பதிமூன்று இப்போது, மீதி எப்போது? என்ற அளவில் மட்டுமே அரசியல் செய்ய முயன்றால், ஒன்றுமே கிடைக்காமல் போய்விடுவதற்கே வாய்ப்புகள் அதிகம்.

இதில், ஆறுமாதமோ, ஒருவருடமோ கழிந்த பின்னர் மீண்டும் இந்திய பிரதமருக்கு கடிதம் எழுதுவோமா, என்று இவர்களே புறப்படவும் செய்வார்கள். அப்போது, ரணில் அல்லது வேறு ஏதாவது அரச தரப்பு, தாங்கள் அளித்த பதிமூன்றை நிராகரித்தது மட்டுமல்லாமல், நாட்டின் சுதந்திர தினத்தையே துக்க தினமாக அனுஷ்டித்த தமிழர் தரப்பினருடன் தங்களால் பேச்சு நடத்த முடியாது என்று கூறிவிட்டால் இவர்கள் எங்கே போய் முட்டிக் கொள்வார்கள்?

### முயலுக்கு மூன்றே கால்

அதேசமயம், தமிழர் அரசியல் தலைமையை கலக்காமலே, அரசு, பதிமூன்றாவது திட்டத்தினை முழுவதுமாகச் செயல்படுத்தினால், இவர்கள் கூறி அதனையும் தமிழ் மக்கள் பகிஷ்கரிப்பார்களா, என்ன? இவர்களில் யாருக்குமே விடுதலை புலிகள் இயக்கத்திற்கு இருந்தது போல் அமைப்பும் இல்லை, ஆதரவும் இல்லை. எனவே, அவர்களை போன்ற அதிகாரமும் இல்லை.

இன்னும் சொல்லப்போனால், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் காலத்திலேயே, சந்திரிகா அம்மையார் ஜனாதிபதியானால், தங்களுக்கு கதி மோட்சம் கிடைக்கும் என்று நினைத்து, அவருக்கு 1995ஆம் ஆண்டு அதிக அளவில் வாக்களித்தவர்கள்தானே, இந்த மக்கள்? அதனால்தானே, எங்கே அவர்கள் வாக்குசாவடிக்கு போய்விட்டால், ரணிலுக்கு வாக்களித்து, ஜனாதிபதி ஆக்கிவிடுவார்கள் என்று கருதி தானே, மஹிந்த ராஜபக்ஷ வெற்றி பெறும் வகையில், 2005 தேர்தலை கட்டாயப்படுத்தி, பயமுறுத்தி, விடுதலை புலிகள் இயக்கமே, தேர்தலை பகிஷ்கரிக்க செய்தது?

அதனால், விடுதலை புலிகள் இயக்கம் அடைந்த இலாபம்தான் என்ன? தங்களை சுற்றி என்ன நடக்கிறது என்று புரிந்து கொள்ளாமலே, தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று கருதி செயல்பட்டமையால்தான், அவர்களாலேயே தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி மஹிந்த கையாலேயே காணாமல் ஆக்கப்பட்டார்கள்.

ஆங்கிலத்தில், 'பொயட்டிக் ஜஸ்டிஸ்' என்பார்களே, அது போல பிரேமதாசா அரசுடன் கைகோர்த்துக்கொண்டு இந்தியாவை எதிர்த்து போராடியது, பின்னர் ராஜீவ் காந்தி படுகொலை, அதனைத் தொடர்ந்து பிரேமதாசா படுகொலை ஆகியவற்றின் தார்மீக தாக்கத்தின் விலையை அவர்கள் கொடுக்க வேண்டியது, காலத்தின் கட்டாயம். விநாசகாலே விபரீத புத்தி என்பார்கள். எனவேதானோ என்னவோ, சரியான அறிவுரை வழங்கிய பாலசிங்கத்தையும் முதலில் ஓரம் கட்டினர்.

### ஆற்றில் ஒரு கால், சேற்றில் ஒரு கால்

ஆனால், அதனை காரணம் காட்டி, காணாமல் ஆக்கப்பட்டோர் பெயரில் இன்றளவும் அரசியல் நடக்கிறது. அதனை ஊக்குவிக்கும் அனைவருக்குமே, காணாமல் ஆக்கப்பட்டோர் காணாமல் ஆக்கப்பட்டோரே என்பதும் உள்ளுணர்வால் தெரியும். அப்படியானால், உண்மையிலேயே அவர்கள் செய்ய வேண்டிய விடயம்தான் என்ன? அது குறித்து யோசித்து செயல்பட இவர்கள் யாருமே தயாராயில்லை.

இந்த பின்னணியில், மீண்டும், மீண்டும் உரிமையின் பெயரால், தாங்கள் தமிழ் மக்களுக்கு ஆற்ற வேண்டிய கடமைகள் என்று பிரிந்துபட்ட அரசியல் தலைமைகள் தங்களுக்கு தானே வரிந்து கொண்டு செயல்படுகிறார்கள். இதனால், அந்த மக்களுக்கு இன்னும் அதீதம் இல்லாத அதிக துன்பங்களே கிடைக்கப்போகிறது. அந்த மக்களுடைய துன்பங்களும் துயரங்களும், இன்று. ஆற்றில் ஒரு கால், சேற்றில் ஒரு கால் என்று செயல்படும் அனைத்து தஷ்லைவர்களது காலத்திற்கு பின்னும் தொடர் கதையாகவே இருக்கும்.

இதில், சம்மந்தன் மட்டுமே வயோதிகர் என்று நினைத்துக்கொண்டு, யாரும் தங்களை இளைஞர்களாக பாவித்து நடிக்க வேண்டாம். இவர்களுடைய அன்றாட கூத்திற்கு நடுவே, தாங்களும் வயோதிகர்கள்தான் என்பதை பலரும் மறந்து விடுகிறார்கள். பிள்ளையில்லாத வீட்டில் கிழவன் துள்ளி விளையாடுவது போன்றதே அவர்களது நிலைமை, நிலைபாடு.

### தகுதியும், குணமும்

இதற்கு முன்னர், தந்தை செல்வா தொடங்கி, அமிர்தலிங்கம், பின்னர் பிரபாகரன், தற்போது சம்மந்தன் என்று யாருடைய தலைமைத்துவத்தின் கீழும் தமிழர்களுக்கு உரிமைகள் கிடைக்கவில்லை என்றால், இப்போது, அவரது காலத்திற்கு பின் யாருடைய தலைமையின் கீழும் அது நடவாது. காரணம், இவர்களில் யாருடைய தலைமைத்துவ தகுதியும் குணமும் கண்ணுக்கெட்டிய தூரம் வரை, எந்தவொரு தமிழ் தலைவரிடமும் இல்லை.

இரண்டாவது, நாளுக்கு நாள், தமிழர் அரசியல் தலைமைகள், பிரிந்து, உடைந்து, சின்னபின்னமாக போவதற்கு கங்கணம் கட்டிக்கொண்டு செயல்படுகின்றன. சுக்கு நூறாக உடைந்த அத்தகைய மிதவாத தலைமைகளை வைத்துக்கொண்டு, தென்னிலங்கை அரசியல்வாதிகள், நன்றாகவே பந்தாடுவார்கள். இவர்களும், மகன் செத்தாலும் பரவாயில்லை, என்ற விதத்திற்கு, கொழும்பு இழுத்த இழுப்பிற்கு எல்லாம் ஆடிக்கொண்டு, எட்டப்பன் வேலை செய்வார்கள்.

இதற்காக, கடந்த காலங்களிலும், ஏன், தற்போதும்கூட, அரச தரப்பு நாணயத்துடன் நடந்துகொண்டது, அல்லது நடந்து கொள்ளும் என்பதல்ல பொருள். இன்னும் சொல்லப் போனால், தமிழர்களை பொறுத்த வரையில், பொருளாதார பிரச்சினையால் எரிந்து கொண்டிருக்கும் வீட்டில, தங்களால் முடிந்ததை, பிடுங்கிக் கொள்வது மட்டுமே, தற்போதைக்கு ஆதாயம்.

அதைவிட்டு, வீட்டு தலைவர் என்று பிறர் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படுபவர், சொந்த பிரச்சினைகளுக்கிடையே, தங்களுடன் ஆற அமர இருந்து கதைத்து, இதுவரை யாராலும் தீர்க்கப்படாத பிரச்சினைக்கு, இதோ, இப்போதே தீர்வு காண முனைவார் என்று தமிழர் தலைமைகள் நினைத்தால், அவர்கள் மீண்டும் ஒரு முறை பிழை விடுகிறார்கள். மீண்டும், மீண்டும் தங்களது அறிவீனத்தை உலகிற்கு பறைசாற்றுகிறார்கள்.

அந்த சர்வதேசமும், அவர்களுடைய முட்டாள் தனத்தை முதலாக வைத்து தனது, மூலதனத்திற்கு மேலும் மேலும் அதிக ஆதாயம் தேடும். அவ்வளவுதான். இதில், புலம்பெயர்ந்தோர் யார் பக்கம், என்பதே கேள்வி!

உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

செவ்வழி நயனம்

# பழனி ஆண்டவர் திருவருள் சொரியும் தைப்பூசத்திருநாள்

இப்போதெல்லாம் சபரிமலை யாத்திரை குறித்து பலரும் கேள்விப்பட்டிருப்பார்கள். நம் நாட்டில் கதிரமலை (கதிர்காம) யாத்திரை தனிச்சிறப்புடையது. அது போல பல நூறாண்டுகளாக தைப்பூச விழாவுக்காக பழனி நோக்கி அடியார்கள் யாத்திரை செய்கிறார்கள்.

நாட்டுக்கோட்டை நகரத்தார்களிடம் ஆரம்பித்த இந்த தைப்பூசப் பழனிப் பாத யாத்திரையில் இப்போதெல்லாம் லக்ஷோபலக்ஷம் அடியார்கள் பங்கு கொண்டு பயனடைகிறார்கள்.

பழனிப் பெருங்கோயில் அற்புதக் கீர்த்தி உடையது. அதனால் இத்தலத்தை அருணகிரிநாதப் பெருமான் அதிசயம் அநேகமுற்ற பழனி என்று போற்றுவார்.

இத்தலத்திற்குத்தான் மிக அதிகமான (நூற்றுக்கு மேற்பட்ட) திருப்புகழ்களையும் அவர் அருளிச் செய்துள்ளார்.

இந்த மகத்துவம் மிக்க பழனியில் சிவகிரி மீது எம்பெருமான் ஞான தண்டாயுதபாணியாகக் காட்சி அருளுகிறான்.

தைப்பூசம் என்பது பெருமான் வெற்றி வேல் பெற்ற திருநாள். அறுவடைத்திருநாள். தொடங்கும் செயல்களை எல்லாம் வெற்றி பெறச்செய்யும் குரு பார்வை மிக்க பூச நக்ஷத்திர நாள்.

இந்த நாளில் ஞானமே வடிவான பழனி ஆண்டவரது தரிசனத்திற்காக அடியார்கள் காவடிகளைச் சுமந்தவாறு பல நூறு மைல்களைத் தாண்டி பல நாட்கள் நடந்து பழனி வந்தடைகிறார்கள்.

போகர் என்ற சித்தர் அமைத்த நவபாாண மூலிகைகளால் ஆனவர் இத்தலத்து இறைவன்.

அவன் திருமேனி பட்ட பஞ்சாமிருதமும் சந்தனமும் அளவிடமுடியாத ஆற்றல் பெற்றவை.

இத்தலமே சித்தர் வாழ்வு என அழைக்கப்படுவது. இங்கே பெருமானே மாபெரும் சித்தனாகத் தோன்றுகிறான்.

ஆண்டிக் கோலத்தில் அருளுகிற இந்தப் பெருமான் மீது கொண்ட அளவற்ற காதலால் கோயில் விமானத்தைப் பொன் வேய்ந்திருக்கிறார்கள்.

வேண்டியது வேண்டாமை இலானாக கோவணம் சாற்றிய ஆண்டிக்கோல ஆண்டவர் தன்னை வேண்டி வழிபடுபவர்களுக்கு வேண்டியன வேண்டியவாறு அருள்கிறார்.

அதனால்தான் நம் ஈழ நாட்டிலும் பல்வேறு முருகதலங்களிலும் பழனி ஆண்டவர் கோல முருகனுக்கு தனிச்சந்நிதி அமைத்துப் போற்றுகிறார்கள்.

மாவிட்டபுரத்தில் மேற்கு கோபுர வாசல் வழி பழனி முருகனை காணலாம். நல்லூரில் இவருக்கு ஆண்டு முழுவதும் தினமும் அபிகேம் நடக்கிறது. நீர்வேலி கந்தசுவாமி கோயிலில் சிறிய குன்று போன்ற அமைப்புடைய சந்நிதியில் வாசலிலேயே காட்சி தருகிறார்.

கதிர்காமத்தில்கூட பெரிய கோயில் அருகில் தெய்வானை அம்மன் கோயிலை ஒட்டி பழனி ஆண்டவர் கோயில் இந்து முறையில் இன்று வரை வேத – தமிழ் மறை ஓதி பூஜிக்கப்படுகிறது. நம்மில் பலரும் மாவிளக்கேற்றி வழிபடுவது அங்குதான்.

எல்லாவற்றையும்விட இந்த ஆண்டு (2023) பழனிக்கோயில் புதுப்பிக்கப்பட்டு தை ரேவதியில் மகா கும்பாபிகேமும் நடந்திருக்கிறது.

இப்படி காருண்ய மலையாகக் காட்சி தரும் பழனி மலை இறைவனை தைப்பூச நாளில் சிந்திப்போம். தான் ஆண்டியாக நின்றாலும் தன்னை நோக்கி கை நீட்டுவோருக்கு அவன் என்றும் இல்லை என்றே சொல்வதில்லை. அத்தகு பழனி மலை வள்ளல் எங்களை காக்கட்டும்!!



சண்ட³-பாப-ஹர-பாத³ஸேவநம்ʼ
க³ண்ட³-ஶோபி⁴-வர-குண்ட³ல-த்³வயம் ।
த³ண்டி³தாகி²ல-ஸுராரி-மண்ட³லம்ʼ
த³ண்ட³பாணிமநிஶம்ʼ விபா⁴வயே ॥ 1 ॥

பாதத்தில் சேவிக்கும் பக்தர்களின் கொடிய பாவங்களை அழிப்பவர். கன்னங்களின் ஓரத்தில் அழகுறும் குண்டலங்கள் அணிந்தவர். அரக்கர் கூட்டங்களை தண்டித்து அடக்குபவர். அந்த தண்டபாணியை இடையறாது தியானிக்கிறேன்.

தாபஹாரி-நிஜபாத³-ஸம்ʼஸ்துதிம்ʼ
கோப-காம-முக²-வைரி-வாரகம் ।
ப்ராபகம்ʼ நிஜபத³ஸ்ய ஸத்வரம்ʼ
த³ண்ட³பாணிமநிஶம்ʼ விபா⁴வயே ॥ 4 ॥

பாதத்தை துதிப்பவர்களின் தாபங்களை அகற்றுபவர். காமம் குரோதம் முதலான பகைகளை நீக்குபவர். தனது பதத்தை விரைவில் அடைய அருள் செய்பவர். அந்த தண்டபாணியை இடையறாது தியானிக்கிறேன்.

**நீர்வை. தி.மயூரகிரி சிவாச்சார்யார்**

# அரோகரா என்ற சொல்லின் அர்த்தம் தெரியுமா?

இதன் பொருள் என்னவென்றால்

'அரோஹரா' அல்லது 'அரோகரா' என்பது 'அர ஹரோ ஹரா' என்ற சொற்களின் சுருக்கம். ரோகம் என்றால் நோய், அரோகம் என்றால் நோயில்லாமல், அரன் என்றால் காப்பவன், ஹர என்றால் நீக்குபவன்

இதற்கான பொருள்.

"இறைவனே, நோய் நொடிகளை நீக்கி துன்பங்களில் இருந்து காத்து நற்கதி அருள்வாயாக" என்பதாகும்.

வெற்றி வேல் முருகனுக்கு அரோகரா

தை மாதத்தில் பூச நட்சத்திமும், பௌர்ணமியும் சேர்த்து வரும் நன்னாளே தைப்பூசமாக கொண்டப்படுகிறது. இந்த நன்னாளானது முருகனுக்கு மிகவும் உகந்த நாளாகக் கருதப்படுகிறது.

தைப்பூசம் தீயவைகளை அழிக்கும். முருகனின் ஞானவேல் பழனி மலையில் வீற்றிருக்கும்போது அன்னை பார்வதிதேவி, அசுரர்களை அழிப்பதற்காக, ஞானவேல் வழங்கிய திருநாள்தான் தைப்பூச திருநாள் தேவர்களின் படைத் தளபதியாக பொறுப்பேற்று, தேவர்களை சம்ஹாரம் செய்ய முருகப் பெருமான் பயன்படுத்திய ஞானவேலை தைப்பூச திருநாளில் வணங்கி வழிபட்டால், மாந்திரீகம், ஏவல், பில்லி, சூனியம் என எந்த கெட்ட சக்தியும் நம்மை அனுகாது என்பது நிச்சயம்.

நாம் அனைவருமே இறைவனால் படைக்கப்பட்ட பொம்மைகள். அவன் ஆட்டுவிக்கும் தன்மைக்கு ஏற்பதான் நாம் ஆடவேண்டுமே தவிர, நம் இஷ்டத்திற்கு ஆடத் தொடங்கினால், அவ்வளவுதான், இறைவன் அதை வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்க மாட்டார். இது மனிதர்களுக்கு மட்டுமல்ல, மனிதர்களுக்கும் மேலான தேவர்களுக்கும், முனிவர்கள், ரிஷிகளுக்குமே மிகச் சரியாகப் பொருந்தும்.

எப்பொழுதெல்லாம், கடவுள் இருப்பதையே மறந்து தேவலோக வாசிகளான தேவர்கள் தாங்கள்தான் பெரியவர்கள், தங்களை மிஞ்சிய சக்தி ஏதும் கிடையாது, என்ற நினைப்பில் அளவுக்கு அதிகமாக மமதையில் திளைக்கிறார்களோ, அப்போதெல்லாம், அவர்களுக்கு புத்திமதி சொல்வதற்காக, மறுபக்கம் ஏதாவது ஒரு திருவிளையாடலை நடத்தி அவர்களைக் கடவுள் நல்வழிப்படுத்துவது உண்டு.

தேவர்களின் குணநலன்களை நன்கு அறிந்த அசுரர்களும் அவ்வப்போது, தேவர்களுடன் போரிட்டு, அவர்களை இந்திரலோகத்தில் இருந்து துரத்திவிட்டு, அதை தாங்கள் கைப்பற்றி ஆட்சி செய்வதுண்டு. தேவர்களோ, அசுரர்களை எதிர்க்கத் துணிவில்லாமல் ஓடி ஒளிந்து கொள்வார்கள். கூடவே தங்களைக் காப்பாற்றவேண்டும் என்று முதலில் பிரம்ம தேவரை அணுகிக் கதறுவார்கள். பிரம்மாவும், என்னால் எதுவும் செய்ய முடியாது, நீங்கள் ஶ்ரீமன் நாராயணனை அனுகி ஐடியா கேளுங்கள் என்று ஒதுங்கிக் கொள்வார்.

தேவர்களும் வேறு வழியில்லாமல், ஶ்ரீமன் நாராயணனை நாடி, அசுரர்களின் கொடுமையிலிருந்து தங்களை காக்க வேண்டும் என்று மன்றாடுவார்கள்.

ஆனால், ஶ்ரீமன் நாராயணனோ, என்னால் எதுவும் செய்ய முடியாது, நீங்கள் எல்லாம் வல்ல ஈசனையே நாடி அவரைச் சரணாகதி அடையுங்கள். அவர் உங்களுக்கு நல்வழி காட்டுவார் என்று அவரும் ஒதுங்கிக் கொள்வார். இறுதியில் எம்பெருமான் ஈசனை நாடி தங்களை காத்தருள வேண்டும் என்று சரணடைவார்கள். வேறு வழியில்லாமல், ஈசனும் தேவர்களை காத்தருள, திருவிளையாடலை நடத்தி சுபம் போட்டு முடித்து வைப்பார். இது மெகா சீரியல் போல் தொடர்ந்து நடக்கும் விளையாட்டாகும்.

தைப்பூச திருவிழா உருவான விதமும் அப்படித்தான். என்னதான் தேவர்களும் அசுரர்களும் சகோதரர்களாக இருந்தாலும், அசுரர்கள் அதிக பலம் பெற்றவர்களாக இருந்ததால், அவர்களை எதிர்த்து தேவர்களால் போரிட முடியவில்லை. என்னதான் போரிட்டு அசுரர்களை அழித்துக் கொண்டே வந்தாலும், திரும்பத் திரும்ப வந்துகொண்ட இருந்தனர். இதனால் தேவர்கள் களைத்து போய் விட்டனர்.

தங்களால் தேவர்களை எதிர்த்து வெல்ல முடியாது என்று மூளைக்கு உறைத்த உடனே, தங்களை வழி நடத்தவும், அசுரர்களுக்கு எதிரான போரில் தங்களுக்கு தலைமை தாங்கிச் செல்லக்கூடிய ஆற்றல்மிக்க ஒரு தலைவனை உருவாக்கித் தரவேண்டும் என்று எம்பெருமான் ஈசனிடம் முறையிட்டனர்.

முக்காலமும் உணர்ந்த எம்பெருமான், தேவர்களின் மனக்குறையை நிவர்த்தி செய்ய வேண்டி, தன்னுடைய சக்தியில் இருந்து உருவாக்கிய அவதாரம்தான் கருணைக் கடலான கந்தவேல். சிவபெருமான் தன்னுடைய நெற்றிக்கண்ணில் இருந்து வெளிப்படுத்திய ஆறு தீப் பொறிகளையும், சரவணப் பொய்கையில் விழுமாறு செய்தார். சரவணப்பொய்கையில் விழுந்த ஆறு தீப்பொறிகளும் அழகிய ஆறு குழந்தைகளாக உருமாறின. உடனே அந்த ஆறு குழந்தைகளையும் ஆறு கார்த்திகைப் பெண்கள் எடுத்து வளர்த்தனர். கார்த்திகைப் பெண்கள் எடுத்து வளர்த்ததால் கந்தன், கார்த்திகேயன் என்று அழைக்கப்பட்டனர்.

கார்த்திகைப் பெண்களிடம் வளர்ந்த கார்த்திகேயனை, அன்னை பார்வதி தேவியார் சேர்த்து அனைத்து ஆறு குழந்தைகளையும் ஒன்றாக்கினார். ஆறு முகங்களையும் ஒன்றாக்கியதால் முருகன் என்றழைக்கப்படுகிறார். முருகன் ஆண்டிக் கோலத்தில் பழனி மலையில் வீற்றிருக்கும்போது அன்னை பார்வதி தேவி, அசுரர்களை அழிப்பதற்காக, ஞானவேல் வழங்கிய திருநாள்தான் தைப்பூச திருநாள் ஆகும். இதன் காரணமாகவே, அறுபடை வீடுகளில், மற்ற இடங்களை விட , பழனி மலையில் தைப்பூசத் திருவிழா வெகு விமரிசையாக கொண்டாடப்படுகிறது.

தேவர்களின் படைத் தளபதியாக பொறுப்பேற்று, தேவர்களை சம்ஹாரம் செய்ய முருகப் பெருமான் பயன்படுத்திய ஞானவேலை தைப்பூச திருநாளில் வணங்கி வழிபட்டால், மாந்திரீகம், ஏவல், பில்லி, சூனியம் என எந்த கெட்ட சக்தியும் நம்மை அனுகாது என்பது நிச்சயம்.

**ஓம் சரவணபவாய**

## மகாநாயக்க ...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

தித்து நலம் விசாரித்ததோடு அட்டப்பிரிகரவையும் அவருக்குக் அன்பளித்தார்.

மல்வத்து மகாநாயக்க தேரர் தலைமையிலான மகாசங்கத்தினர் ஜனாதிபதிக்காகப் பிரித் பாராயணம் செய்து ஆசீர்வதித்ததோடுமல்வத்துமகாநாயக்க வணக்கத்துக்குரிய திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரர், ஜனாதிபதிக்கு விசேட நினைவுப் பரிசொன்றையும் வழங்கினார்.

மல்வத்துமகாவிகாரையில்வைக்கப்பட்டுள்ள நினைவுப் புத்தகத்தில் குறிப்பொன்றை ஜனாதிபதி எழுதினார்.

அதையடுத்து அஸ்கிரி மகா விகாரைக்குச் சென்ற ஜனாதிபதி, அஸ்கிரி பீட மகாநாயக்க தேரர் வணக்கத்துக்குரிய வரகாகொட ஸ்ரீ ஞானரதன தேரரைச் சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

அஸ்கிரி மகா விகாரையின் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பில் ஜனாதிபதி கேட்டறிந்ததோடு, அஸ்கிரி மகா நாயக்க தேரர் தலைமையிலான மகா சங்கத்தினர் பிரித் பாராயணம் செய்து ஜனாதிபதிக்கு ஆசீர்வாதம் வழங்கினார்கள்.

ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க உள்ளிட்ட அதிகாரிகள் இந்த நிகழ்வுகளில் கலந்துகொண்டனர்.

## தெற்கின் ஜனநாயகத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் தலைவரும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியப் பங்காளியுமான என்.ஸ்ரீகாந்தா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியொன்றில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்த அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனநாயக ரீதியாக முன்னாள் ஜனாதிபதியை விரட்டியடித்த தென்னிலங்கை போராட்டத்தில் ஏன் தமிழர்கள் இணையவில்லை என்பதை அவர்கள் சிந்திக்கவேண்டும். தமிழர்களோ தமிழர் தரப்போ தீர்வாக ஏற்றுக்கொண்டிராத 13ஆம் திருத்தத்தை

வெளிநாட்டுக்கருணையால்வாழும் இலங்கை ஆட்சியர்கள் முழுமையாக அமுல்படுத்துவதாக கூறியிருந்தனர்.

மாகாணங்களுக்குள்ள காணி, பொலிஸ் அதிகாரங்கள் உட்பட 13ஆம் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த இரண்டு வருடங்கள் அல்ல இரண்டு வாரங்கள் போதும். ஆனால் 13இற்கு எதிராக தென்னிலங்கையில் குரல் எழுப்பப்படுகிறது. 13ஐ முழுமையாகஅமுல்படுத்தக்கூடாதுஎனபௌத்த தரப்புக்கள் போர்கொடி தூக்கியுள்ளன.

தமிழ் மக்கள் இந்த நாட்டின் பிரஜைகள் என்ற முறையிலே இந்த நாட்டிலே ஆட்சி அமைப்பு முறையை மாற்றி அமைப்பதற்கு சிங்கள முற்போக்கு சக்திகள் ஒன்றிணைந்து ஆதரவளிக்க வேண்டும். ஜனநாயகப்போராளிகளாக தென் பகுதியிலே மக்கள் மத்தியில் தொடர்ந்து போராடி வருபவர்கள் தமிழ் மக்களின் அரசியல் நீதி கோரிக்கையை அங்கீகரிக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

எனவே தமிழ் மக்களின் கோரிக்கையை அவர்கள் ஏற்காதவரையில் அவர்களின் ஜனநாயக ரீதியான எந்த ஒரு போராட்டத்திற்கும் தமிழ் மக்களின் ஆதரவு கிடைக்காது. தென்பகுதியில் ஜனநாயக ரீதியில் போராடும் இளைஞர் யுவதிகள் அரசியல்வாதிகள் முற்போக்கு சக்திகள் தமிழ் மக்களின் அரசியல் நீதியினை ஏற்க வேண்டும் என்றார்.

## இராணுவத்தின் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோப்பாய் முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளனர்.

இந்த நிகழ்வில் பங்கேற்க மாணவர்களை அழைத்து வருமாறு ஆசிரியர்களிற்கு பாடசாலை மூலம் அறிவித்தல் விடப்பட்டுள்ளது.

பாடசாலை விடுமுறைக் காலம் என்பதோடு சுதந்திர தின விடுமுறையும் உள்ளதனால் ஆசிரியர்கள், மாண வர்கள் வருகை வெகு குறைவாகவே இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதேநேரம் முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் மாணவர்கள் தங்கு விடுதி உள்ளமையினால் அவர்கள் நிகழ்வில் கலந்துகொள்ள வைக்கப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## ஹெரோயினுடன் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ் மூத்த பொலிஸ் அத்தியட்சரின் கீழ் இயங்கும் விசேட குற்றத்தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி மேனன் தலைமையிலான குழுவினரால் இவர் கைது செய்யப்பட்டார்.

நேற்று இரவு கோப்பாய் பகுதியில் போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபடும் பெண் ஒருவரைக் கைது செய்யச் சென்ற சமயத்தில் இந்தக் கான்ஸ்டபிளும் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 29 வயது பெணும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட கான்ஸ்டபிள் அரியாலையை, பூம்புகாரைச் சேர்ந்த சு.பிரணவன் என்று தெரிவிக்கப்பட்டது. இவர் காங்கேசன்துறையில் கடமையாற்றி வருகின்றார். போதைப்பொருள் வர்த்தகம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள பெண்ணை, இதற்கு முன்னரும் கைது செய்வதற்காகத் தேடிச் சென்ற சமயத்தில் பழக்கம் ஏற்பட்டு போதைப்பொருள் பயன்படுத்துவதற்கு அல்லது வியாபாரம் செய்வதற்கு இவர் முற்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

## 3 வீடுகள் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதிக்கப்பட்டுள்ளதுடன் இரண்டு சிறுதொழில் முயற்சியாளர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை,கரவெட்டி, சங்கானை, சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவுகளில் பாதிப்புகள் கூடுதலாக உணரப்பட்டுள்ளது – என்றும் அவர் தெரிவித்தார்.

## துரையப்பாவில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாளைகாலை 8 மணிக்குயாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது என்று யாழ். மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன் அறிவித்துள்ளார்.

சர்வமதத்தலைவர்களின்ஆசியுடன் முப்படைகளின் அணிவகுப்பு, கலை நிகழ்வுகள், மரநடுகை என்பன அங்கு இடம்பெறவுள்ளன.

## விவரங்களை உடன் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அலுவலர் மற்றும் தேர்தல் ஆணைக் குழு என்பன எதிர்வரும் 6ஆம் திகதிக்கு முன்பு உச்ச நீதிமன்றத்திற்கு அறிக்கையிடவேண்டும் என்று உத்தரவிடப்பட்டது.

மார்ச் மாதம் 9ஆம் நாள் நடக்கவுள்ள உள்ளூர் அதிகார சபைகளிற்கான தேர்தலுக்கு வேட்புமனு தாக்கல் நடந்து முடிந்துள்ளது. முல்லைத்தீவு மாவட்டம் கரைத்துரைப்பற்று பிரதேச சபைக்குதமிழ் அரசுக் கட்சியின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனு நிராகரிக்கப்பட்டது. கட்சியின் செயலாளரால் நியமிக்கப்பட்ட முகவர் நேரடியாக வேட்புமனுவைக் கையளிக்காத காரணத்தாலேயே அது நிராகரிக்கப்பட்டது.

இதனை எதிர்த்து தமிழ் அரசுக் கட்சி சார்பில் உச்ச நீதிமன்றில் றிட் மனு தாக்கல் செய்யப்பட்டது. மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரின் தீர்மானத்தை ரத்துச் செய்யவேண்டும் என்று அந்த மனுவில் கோரப்பட்டுள்ளது. தமிழ் அரசுக் கட்சியின் பதில் செயலாளர் மருந்துவர் ப.சத்தியலிங்கம், மருத்துவர் சிவமோகன் மற்றும் செஜசீலன் ஜெயீசன் சார்பில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கு உயர் நீதிமன்றில் நீதியரசர்களான பிரியந்த ஜெயவர்த்தன, குமுதினி விக்கிரமசிங்க, அச்சல வெங்கப்புலி ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. எதிர் மனுதார்கள் சார்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தைச் சேர்ந்த கலாநிதி அவந்தி பெரேரா முன்னிலையானார்.

மனுதாரர்கள் மனுவில் குறிப்பிட்டது போன்றா வேட்பு மனுத்தாக்கல் இடம்பெற்றது என நீதியரசர்கள் கோரிய போது அந்த விவரங்கள் அனுப்பி வைக்கப்படவில்லையென சட்டமா அதிபர் திணைக்களம் சார்பில் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து அந்த விவரங்கள் அனைத்தையும் 6ஆம் திகதிக்கு முன்பு தேர்தல்கள் ஆணைக் குழுவும், தெரிவத்தாட்சி அலுவலரும் அனுப்பிவைக்க வேண்டும் என உத்தரவிட்ட நீதியரசர்கள் வழக்கை 7ஆம் திகதிக்கு ஒத்திவைத்தனர்.

இந்த வழக்கில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனுடன் சட்டத்தரணிகளான டிவ்வியா நஸ்கம, கேசவன் சயந்தன், டிலான் கொரயா ஆகியோர் மனுதாரர்கள் சார்பில் முன்னிலையாகி இருந்தனர்.

## காணி விடுவிப்பு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"மிகத் தாமதமாக மிகச் சொற்பமாக" காணிகள் விடுவிக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தான் நிகழ்வைப் புறக்கணிக்கிறார் என்று ஜனாதிபதியின் இணைப்புச் செயலாளர் இ.இளங்கோவனுக்கு அவர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் விக்னேஸ்வரன் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ். குடாநாட்டில் 3000 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலம் படையினர் வசம் இருக்கும் நிலையில் விடுவிக்கப்படுகின்ற காணிகள் புறக்கணிக்கத்தக்க அளவிலானவை. வடக்கு மாகாணம் முழுவதும் 60 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான காணிகளை அரச படைகள் ஆக்கிரமித்துள்ளன. அவற்றில் எவையும் விடுவிக்கப்படவில்லை.

தொடருந்துப் பாதைகள், கட்டுமானங்கள் அமைப்பதற்காக தமக்கு வேறு காணிகள் எதுவும் தேவையில்லை என்று இந்திய அரசு எனக்கு முன்னர் தெரிவித்திருந்தது. அப்படிப் பார்க்கும் போது பலாலியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் விமான நிலையத்தின் பாதுகாப்புக்காக மட்டுமே அங்கு நிலையெடுத்துள்ளனர். அப்படி விமான நிலையப் பாதுகாப்புக்குத் தேவையானது தவிர பல மடங்கு காணிகளை அவர்கள் ஆக்கிரமித்து வைத்திருப்பது எதற்காக?

மிகப் பெரும் தொகை ஏக்கர்கள் விடுவிக்கப்படவேண்டியிருக்கும்போது ஒரு சிறு துண்டுக் காணிகளை விடுவிப்பது வெறும் கண்துடைப்பு.

எப்படியிருப்பினும் இந்த மிகத் தாமதமான மிகச் சொற்பமான காணி விடுவிப்பை நான் வரவேற்கின்றேன். மக்களின் எஞ்சிய காணிகளும் விடுவிக்கப்படுமாயின் அதற்கு என்னால் முடிந்த வகைகளில் ஒத்துழைப்பேன். அப்படி ஒரு நிகழ்வு நடந்தால் அதில் நான் பங்கேற்பேன் என்று நீங்கள் எதிர்பார்க்கலாம்.

இந்தக் காரணங்களுக்காகவே என்னுடைய எதிர்ப்பு நடவடிக்கையாக இன்றைய நிகழ்வை நான் தவிர்க்கின்றேன் – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## '13' திருத்தம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் நேற்று நடைபெற்ற செயலமர்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

13 ஐ முழுமையாக அமுலாக்க இடமளிக்கமாட்டோம். அதனை தோற்கடிக்க எல்லா வழிகளிலும் போராடுவோம் என்றும் விமல் குறிப்பிட்டார்.

அதேவேளை, 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் மகாநாயக்க தேரர்களால் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட கடிதத்தையும் விமல் வரவேற்றார்.

## நீதிவான் முன்பாகவே ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவிலுள்ள கருவப் பங்கேணி பிரதேசத்தில் கஞ்சாவுடன் நேற்றுமுன்தினம் ஒருரைக் கைது செய்த பொலிஸார், அவரை நேற்றுப்பகல் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த அழைத்து வந்தனர்.

நீதிவான் அறையில் பதில் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்த கைதியின் விலங்கைப் பொலிஸார் கழற்றிய போது குறித்த நபர் அங்கிருந்து தப்பியோடியுள்ளார்.

இதையடுத்துத் தப்பியோடிய கைதியைப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம்
076 443 8622



**நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.**


பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2054 | தை 19 | வியாழக்கிழமை | 02.02.2023 | கதிர் 338


## சுதந்திர தினத்தன்று குடிமக்களுக்கு தடை




நாடளாவிய ரீதியில் எதிர்வரும் 4 ஆம் திகதி அனைத்துமதுபானக் கடைகளையும் மூடுவதற்குத் தீர்மா னிக்கப்பட்டுள்ளது.

75ஆவது சுதந்திர தினக் 2

## தமிழரின் கரிநாளையொட்டி

# வடக்கு கிழக்கு எங்கும் பெப். 4 முழு அடைப்பு




### பல்கலைக்கழக மாணவர்கள் அழைப்பு

(இ.கலையமுதன்)

இலங்கையின் சுதந்திர தினமான பெப்ரவரி 4ஆம் நாள்வடக்கு கிழக்கு தமிழர் தாயகமெங்கும் முழு அடைப்புக்கு யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது. 2

## ‘மொட்டு’வின் அமைப்பாளர்களுடன் கொழும்பில் பஸில் அவசர சந்திப்பு




ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அனைத்து தொகுதி அமைப்பாளர்களும் இன்று கொழும்புக்கு அவசரமாக அழைக்கப்பட்டுள்ளனர்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடவே அவர்கள் கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

நெலும் மாவத்தையில் உள்ள ஸ்ரீலங்கா 2

## பெற்றோல் வரிசையை ஏற்படுத்தி தேர்தலை ஒத்திவைக்கச் சதியா?

### அரசிடம் எதிரணி கேள்வி




பெற்றோல் விலையைத் திடீரென அதிகரித்ததன் உள்நோக்கம்என்னஎன்றுஅரசிடம் எதிரணிகேள்விஎழுப்பியுள்ளது.

மீண்டும்பெற்றோலுக்கான வரிசையை ஏற்படுத்த அரசு முயற்சிக்கின்றதா என்றும் எதிரணி வினாத் தொடுத்துள்ளது.

இதனூடாகத் தேர்தலை ஒத்திவைக்க அரசு சதி செய்கின்றதா என்றும் எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஒக்டேன் 92 ரக பெற்றோலின் விலையை நேற்று நள்ளிரவு முதல் அதிகரித்துள்ளது. 2

## கட்சித் தலைவர்கள் கூட்டம் நாளை



சபாநாயகர்மஹிந்தயாப்பா அபேவர்த்தன தலைமையில் விசேட கட்சித் தலைவர்கள் கூட்டம் நாளை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 8ஆம் திகதி ஆரம்பமாக உள்ள புதிய நாடாளுமன்றக் கூட்டத்தொடர் குறித்து இந்தக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் 2

## அநீதியான வரி விதிப்பை நிறுத்து!

### தென்கிழக்குப் பல்கலையில் போராட்டம்




அரசு அறிமுகப்படுத்தியுள்ள புதிய வரி அதிகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து, தென்கிழக்குப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கவனயீர்ப்புப் போராட்டம் பல்கலைகழக நுழைவாயிலில் நேற்று இடம்பெற்றது.

தென்கிழக்கு பல்கலைகழகத்தின் ஆசிரியர் சங்க 2

## ஜனாதிபதி கதிரையிலிருந்து ரணிலை விரட்டியே தீருவோம்

### ஜே.வி.பி. உறுப்பினர் ஹந்துன்நெத்தி சூளுரை



மார்ச் 10 ஆம் திகதி ஆகும்போது ரணில் விக்கிரமசிங்கவால் ஜனாதிபதி கதிரையில் அமர முடியாது. உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகளின் ஊடாக அதை நாம் நிரூபித்துக் காட்டுவோம்.

– இவ்வாறு ஜே.வி.பியின் சிரேஷ்ட உறுப்பினர் 2

## யாழ். மாவட்டத்தில் 118 மி.மீ. மழை பதிவு



யாழ்ப்பாணத்தில் 24 மணி நேரத்தில் 118. 5 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவி பணிப்பாளர் என். சூரியராஜ் தெரிவித்தார்.

வங்காள விரிகுடாவில் நிலைகொண்டிருந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் திருகோணமலையின் சீனன் குடாவுக்கும் 2

## தமிழ் அரசியல் கைதிகள் மூவர் நேற்றிரவு விடுவிப்பு

### ஜனாதிபதி ரணிலின் உத்தரவுக்கமைய

ஜனாதிபதி பொது மன்னிப்புக்கமைய மூன்று தமிழ் அரசியல் கைதிகள் நேற்றிரவு விடுதலை செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த குணசிங்கம் கிருபானந்தம், கிளிநொச்சியைச் சேர்ந்த செல்லையா சதீஸ்குமார், மன்குனாரைச்சேர்ந்த விக்டர் றொபின்சன் 2

## தமிழ் அரசியல்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியோரே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டனர். இவர்களில் இருவர் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டவர்களாவர்.

கிருபானந்தம் 2008ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டிருந்தார். இவருக்குக் கடந்த மாதமே 6 மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. இதேபோன்று, விக்ரர் ரொபின்சன் கடந்த 2014ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டிருந்தார். இவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. இவர்கள் இருவரும் நேற்றிரவு விடுதலையாகினர்.

இதேநேரம் விடுதலை செய்யப்பட்ட மூன்றாவது நபரான கிளிநொச்சியைச் சேர்ந்த செல்லையா சதீஸ்குமார் 2007ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டிருந்தார். கிளிநொச்சி மருத்துவமனையின் அம்புலன்ஸ் சாரதியான இவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. தனது தண்டனைக்கு எதிராக அவர் மேன்முறையீடு செய்துள்ளார். இதனால் அவர் நேற்றிரவு விடுவிக்கப்படவில்லை. மேன்முறையீட்டு மனுவைத் திரும்பப் பெற்றதும் விடுவிக்கப்படுவார் என்று அறியவருகின்றது.

## சுதந்திர......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டாட்டத்துக்காக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது எனக் கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## அநீதியான ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயர்மட்ட உறுப்பினர்கள் உள்ளிட்ட பல்வேறு பீடங்களையும் சேர்ந்த பேராசிரியர்கள், சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட விரிவுரையாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்த இந்தப் போராட்டத்தில் அரசு மேற்கொண்டுள்ள பாரிய வரி விதிப்புக்கு எதிராகப் பல்வேறு சுலோகங்கள் ஏந்தியவாறு நீதி கேட்டு கோஷங்களை எழுப்பினர்.

இதன்போது, அநீதியான வரி விதிப்பை நிறுத்து, அரசின் ஊழலால் விழுந்தவர்களை வரி ஏறி மிதிக்கின்றது, பணத்தை எடுத்தவரிடம் கேட்பதே நீதி; எங்களிடம் கேட்பது அநீதி போன்ற பதாகைகளை ஏந்தியவாறு விரிவுரையாளர்கள் அமைதியான முறையில் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பின்னர் அவர்கள், அரசுக்கும் மக்களுக்கும் தங்களது நிலைப்பாடுகளைத் தெளிவுபடுத்திக் கருத்துக்களை வெளியிட்டனர்.

## பெற்றோல்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்படி, லங்கா பெற்றோல் 92 ஒக்டேனின் விலை 370 ரூபாவிலிருந்து 30 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய புதிய விலை 400 ரூபாவாகும்.

எனினும், ஏனைய ரக பெற்றோல் மற்றும் டீசல் என்பவற்றின் விலைகளில் மாற்றம் மேற்கொள்ளப்படவில்லை.

இதனிடையே, சிபெட்கோ நிறுவனத்தின் ஒக்டேன் 92 ரக பெற்றோல் விலை அதிகரிப்பைத் தொடர்ந்து லங்கா ஐ.ஓ.சி. நிறுவனமும் அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

சிபெட்கோ நிறுவனத்தின் தீர்மானத்துக்கு அமைவாக பெற்றோல் விலை 30 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் தெரிவித்துள்ளது

## கட்சித்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துரையாடப்படவுள்ளது. 9ஆவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடர் கடந்த மாதம் 27ஆம் திகதி நள்ளிரவுடன் நிறைவடைந்தது.

புதிய அமர்வு இந்த மாதம் 8 ஆம் திகதி காலை 10 மணிக்கு ஆரம்பமாகும் என இது தொடர்பான விசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## யாழ்.மாவட்ட......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உப்புவெளிக்கும் இடைப்பட்ட பகுதியினூடாக கரையைக் கடக்கும் என எதிர்பார்க்கப்படும் நிலையில் நாட்டின் பல பகுதிகளிலும் கடந்த இரு நாள்களாகக் கன மழை பெய்து வருகின்றது.

இது தொடர்பில் சூரியராஜ் மேலும் தெரிவித்ததாவது:

காற்றழுத்த தாழ்வு மண்டலத்தின் வெளிவளையம் நிலப் பகுதிக்குள் நுழைய ஆரம்பித்துவிட்ட நிலையில் இன்று அது முழுவதுமாக கரையைக் கடந்துவிடும் எனஎதிர்பார்க்கப்படுகின்றது.

நேற்று காலை முதலான 24 மணி நேரத்திற்குள் யாழ் மாவட்டத்தில் 118.5 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி கிடைக்கப்பெற்றுள்ளது,

தற்போது வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளிலும் பெய்து வரும் மழை நாளைமறுதினம் வரை தொடரும்.

மேலும் வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளிலும் காற்றின் வேகம் மணிக்கு 35 கி.மீ வேகத்தில் வீசுகின்றது. இந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் கரையைக் கடக்கும்போது காற்றின் வேகம் மேலும் அதிகரிக்கலாம்.

வடக்கு மக்கள் தொடர்ந்து அவதானமாக இருப்பது அவசியம் – என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## 'மொட்டு'வின்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில், அதன் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ச தலைமையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெறுகின்றது.

இதேவேளை, உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான அஞ்சல் மூல வாக்கெடுப்பு, இந்த மாதத்தின் மூன்றாம் வாரத்தில் இடம்பெறக்கூடும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து, எதிர்வரும் வாரங்களில், உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

## வடக்கு, கிழக்கு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையின் சுதந்திர தினத்தை கரிநாளாக பிரகடனப்படுத்தி தமிழர்களுக்கான அரசியல் தீர்வுகளை வலியுறுத்தி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலிருந்து மட்டக்களப்பு நோக்கி பேரணி இடம்பெறும் என்று மாணவர்கள் ஏற்கனவே அறிவித்த நிலையில் தற்போது முழு அடைப்புக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. பேரணிக்கு வலுவூட்டியும் இலங்கையின் சுதந்திர தினத்தை கரிநாளாக கடைப்பிடிக்க வலியுறுத்தியும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இன்று செய்தியாளர்களைச் சந்தித்தனர் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள்.

இந்தச் சந்திப்பில் மாணவர் ஒன்றியத் தலைவர் அழகராசா விஜயகுமார் அடைப்புக்கான அழைப்பை விடுத்தார்.

பெப்ரவரி 4ஆம் நாள் கடைகள், வர்த்தக நிலையங்களை பூட்டியும் போக்குவரத்து சேவைகளை நிறுத்தியும் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்தார். மேலும் வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக கறுப்புக் கொடிகளை கட்டி எதிர்ப்பை வெளிப்படுத்துவதுடன் பேரணியில் பங்கேற்று வலுச்சேர்க்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## 9 வேண்டாம்; 4 போதும்!

அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளின் தலைவர்களையும் கூட்டி அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தப் போகின்றேன் என்று கூறி பற்ற வைத்த நெருப்பு தேர்தல் காலத்தில் நன்றாக கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியிருக்கிறது.

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை கடந்த காலங்களிலும் தீவிரமாக எதிர்த்து வந்த, அதை வைத்து இனவாதத்தைக் கிளப்பிக் குளிர்காய்ந்து வந்த தரப்புக்கள் இப்போதும் இந்த விடயத்தைக் சிறப்பாகப் பிடித்துக்கொண்டு கையாள்கின்றன. கடற்படையின் முன்னாள் தளபதி சரத் வீரசேகர, நாடாளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ஸ, உதய கம்பன்பில போன்றவர்களுடன் பிந்திய இணைப்பாக கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா ஜயம்பத் போன்றவர்கள் இது தொடர்பில் இனவாதத்தைக் கக்கத் தொடங்கிவிட்டனர்.

13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்தினால் இனக் கலவரம் வெடிக்கும் என்பதும் அவர்களின் மிரட்டல். கடந்த 1988இல் முதலாவது மாகாண சபை அமைக்கப்பட்டது முதல் 35 வருடங்களாக அதன் பயனை அனுபவித்த சிங்கள மக்களுக்கு, மேலதிகமாக காணி, பொலிஸ் அதிகாரங்கள் தருகின்றோம் என்றால் அதனை வேண்டாம் எனக்கூறி அவர்கள் ஏன் எதிர்க்கப் போகிறார்கள், வன்முறையில் குதிக்கப்போகிறார்கள் என்பதற்கு நியாயமான எந்தவொரு காரணமும் சொல்லாமலே இத்தகைய அரசியல்வாதிகள் இனக் கலவரம் மூண்டுவிடும் என்று மிரட்டுவதன் பின்னணியை புரிந்துகொள்வது சிரமமானதல்ல.

இன்றைய காலகட்டத்தில் சிங்கள மக்களை இவர்கள் இலகுவாகத் தூண்டி இனக்கலவரத்தை ஏற்படுத்திவிட முடியும் என்று அவர்கள் நம்புவார்களானால் அது அவர்களின் முட்டாள்தனமும்கூட. இருந்தாலும் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை எதிர்க்கும்போது இவர்கள் கூறும் சில கருத்துக்கள் பயனுள்ளவையாகவும் இருக்கின்றன.

“அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தால் நாடு 9 மாகாணங்களாக பிரிக்கப்பட்டது. நிலப்பரப்பில் சிறிய நாடான இலங்கைக்கு 9 நிர்வாக அலகுகள் அவசியமற்றவை” என்று தெரிவித்திருக்கிறார் சரத் வீரசேகர. மாகாநாயக்க தேரர்களைச் சந்தித்துவிட்டு வந்து செய்தியாளர்களிடம் பேசும்போது அவர் இதனைத் தெரிவித்திருக்கிறார்.

அவர் கூறுவது உண்மையும்கூட. இலங்கை போன்ற சிறிய நாட்டுக்கு 9 நிர்வாக அலகுகள் தேவையில்லை. ஒருபோதும் அப்படிக் கேட்கப்படவும் இல்லை. தமிழர்களுடன் அதிகாரத்தைப் பகிர்வதற்காகத்தான் இந்திய இலங்கை ஒப்பந்தம் செய்யப்பட்டது. அதன் கூர்மையை மழுங்கடிப்பதற்காகத்தான் ஜே.ஆர். 9 மாகாணங்களை உருவாக்கினார். எனவே 9 மாகாணங்கள் தேவையற்றவை என்பதில் தமிழர்களும் இணங்கிப் போவார்கள்.

இலங்கையில் நான்கு அலகுகளாக அதிகாரங்கள் பிரிக்கப்பட்டால் போதுமானது. தமிழர்களுக்கான அலகு, முஸ்லிம்களுக்கான அலகு, மலயக தமிழர்களுக்கான அலகு என்பவை தற்போதைய சிங்கள அலகில் இருந்து பிரிக்கப்பட்டால் மட்டும் போதுமானது. சரத் வீரசேகர கூறுவதைப் போன்று புதிய அரசமைப்பு ஒன்றின் ஊடாக இத்தகைய மூன்று அலகுகளில் அதிகாரங்கள் பகிரப்படுவதை தமிழர்களும் விரும்புவார்கள்.

அந்த அதிகாரப் பகிர்வு தமிழர்களின் தாயகத்தை (நிலப்பரப்பு) அங்கீகரித்ததாக, தமிழ்த் தேசத்தை அங்கீகரித்தாக, தமிழர்களின் இறைமையை ஏற்றுக்கொண்டதாக, பகிரப்பட்ட அதிகாரங்கள் மீளப்பெற முடியாததாக, தன்னாட்சி உடையதாக இருந்தால் போதுமானது. சிங்கள தேசம் எத்தனை அலகுகளாக நிர்வகிக்கப்படவேண்டும் என்பதில் தமிழர்களுக்கோ, முஸ்லிம்களுக்கோ கரிசனை ஏதுமில்லை. அது சிங்களவர்களின் உரிமை அதில் வேறு யாரும் தலையிடவேண்டிய அவசியமில்லை.

ஆதலால் சரத் வீரசேகர போன்றவர்கள் 9 அலகுகளை நீக்கி 4 அலகுகளைக்கொண்ட ஓர் தீர்வை நோக்கிச் செல்ல ஆட்சியாளர்களையும் மகாநாயக்கர்களையும் வழிபடுத்தினால் நன்றாக இருக்கும்.

## சுதந்திர தின கொண்டாட்டத்தை திருச்சபையும் புறக்கணித்தது



இந்த ஆண்டு சுதந்திர தின கொண்டாட்டத்தில் கத்தோலிக்க திருச்சபையின் பிரதிநிதித்துவம் இருக்காது என கத்தோலிக்க திருச்சபையின் பேச்சாளர் அருட்தந்தை சிறில் காமினி பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதாரமும் சட்டத்தின் ஆட்சியும் வீழ்ச்சியடைந்துள்ள இந்த நேரத்தில் பெரும் பணத்தை செலவழித்து சுதந்திர தின நிகழ்வை நடத்துவது பெரும் குற்றமும் வீண் விரயம் என்றும் கத்தோலிக்க திருச்சபை தெரிவித்துள்ளது.

பொரளையில் உள்ள பேராயரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சிறில் காமினி பெர்னாண்டோ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ள75 ஆவது சுதந்திர தினத்தை பெருமையாகவும் பிரமாண்டமாகவும் நடத்துவதற்கு அதிக பணம் செலவழிப்பதை கத்தோலிக்க திருச்சபை கடுமையாக எதிர்க்கிறது என்றும் அனைத்து அரசியல் தலைவர்களும் மக்களிடம் பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## மன்னாரில் சரிந்து விழுந்த காற்றாலை மின் கோபுரம்!



மன்னார் மாவட்டத்தில் மிக வேகமாக அமைக்கப்பட்டு வந்த காற்றாலை மின்சார கோபுரம் ஒன்று கட்டுமானப் பணியின் போது உடைந்து விழுந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

மன்னார் நானாட்டான் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட நறுவிலிக் குளம் கடற்கரையோரங்களில் அமைக்கப்பட்டு வந்த கோபுரங்களில் ஒன்று கடந்த மாதமே இது உடைந்து விழுந்தபோதும் அந்தப் பகுதி ஆட்கள் நடமாட்டம் மிகக் குறைந்தது என்பதால் அது பற்றிய தகவல்கள் வெளியே தெரியவரவில்லை.

நீண்ட நாள்களுக்குப் பின்னர் அந்தப் பகுதிக்குச் சென்றவர்கள் கோபுரம் சரிந்து கிடப்பதையும் கனரகபளு தூக்கும் கிரேன் வாகனம் சேதமாகி இருப்பதையும் பார்த்து வந்து கூறியதன் பின்னரே அங்கு நடந்தது வெளியே தெரிய வந்திருக்கிறது.

கோபுரம் சரிந்து கிரேன் மீது விழுந்த போதும் கிரைன் இயக்குநர் காயங்களுடன் உயிர் தப்பியுள்ளார் என அறிய முடிகிறது.

இந்த சம்பவம் நடைபெற்றதில் இருந்து அப்பகுதியில் காற்றாலை கோபுரங்கள் அமைக்கும் பணிகள் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளதுடன் இந்த மாத இறுதியில் மீண்டும் காற்றாலை மின் கோபுரங்கள் அமைக்கும்பணிகள் ஆரம்பிக்கப்பட உள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நானாட்டான் பிரதேசத்தில் நறுவிலிக்குளம் முதல் அச்சங்குளம் வரை 6 மின் கோபுரங்களுக்கான பணிகள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



சாய்ந்தமருது அல் – ஹிலால் பாடசாலையில் தரம் 07 மாணவிகளால் உணவும் போசணையும் எனும் தொனிப் பொருளில் போசணைப் பொருட்கள் பற்றி விழிப்பூட்டல் கண்காட்சி நேற்று நடத்தப்பட்டது.

பகுதித் தலைவர் திருமதி யூ. எல். ஜெஸீமாவின் நெறிப்படுத்தலில் வகுப்பாசிரியரும் பாட ஆசிரியருமான திருமதி பீ.எம்.ஐ.சில்மியாவின் கண்காணிப்பில் முன்னெடுக்கப்பட்ட இக்கண்காட்சியினை அதிபர் யூ.எல். நஸார் மற்றும் பாடசாலையின் ஆசிரிய, ஆசிரியைகள் மற்றும் ஏனைய வகுப்பு மாணவ, மாணவிகளும் பார்வையிட்டனர். (படங்கள் எம்.எஸ்.எம்.ஸாகிர்)

# உலக சுகாதார அவசர நிலையாக கொரோனா அச்சுறுத்தல் நீடிப்பு



உலக சுகாதார அவசரநிலை என்ற அளவில் கொரோனா பாதிப்பு தொடாந்து பெரும் அச்சுறுத்தலாக உலகில் உள்ளது. மனிதாகள் மற்றும் விலங்கள் மீது நிரந்த நுண்ணுயிரியாக கொரோனா தீநுண்மி இடம்பெற வாய்ப்புள்ளது என்று உலக சுகாதர அமைப்பு எச்சரித்துள்ளது.

இது குறித்து உலக சுகாதார அமப்பின் (டபிள்யு.எச்.ஓ) தலைவா டெட்ரோஸ் அதானோம் கேப்ரியேசஸ் திங்கட்கிழமை தெரிவித்ததாவது:

கொரோனா பெருந்தொற்று பாதிப்பு தொடங்கி நான்காவது ஆண்டில் உலகம் அடியெடுத்து வைத்துள்ளது. மூன்றாண்டுக ளுக்கு முன்பு இதே நாளில், கொரோனா பாதிப்பை பொது சுகாதர அவசர நிலையாக உலக சுகாதார அமைப்பு அறிவித்தது.

இந்தப்பாதிப்பைஎதிர்கொள்ளும்அளவுக்கு உலகம் தற்போது நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது என்பதில் சந்தேகமில்லை. இருந்தபோதும், கொரோனா பாதிப்பு தொடாந்து ‘உலக சுகாதார அவசரநிலை’ அளவிலான அச்சுறுத்தல் தொடாவதாக கொரோனா தீநுண்மி நோய் பாதிப்புக்கான அவசரக் குழு அறிவுறுத்தியிருக்கிறது.

தடுப்பூசி உள்ளிட்ட தடுப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தி அதிக மக்களுக்கு நோய் எதிர்ப்புத் திறனை ஏற்படுத்துவதன் மூலமாக கொரோனா பாதிப்பின் தாக்கம் குறைந்துள்ளது என்றும் அவசரக் குழு அறிவுறுத்தியுள்ளது.

கடந்த டிசெம்பா முதல் வார அடிப்படையிலான தகவல்களில் கொரோனா இறப்பு விகிதம் படிப்படியாக உயாந்து வருகிறது. கடந்த 8 வாரங்களில் மட்டும் கொரோனா பாதிப்புக்கு உலகில் 1.70 லட்சம் போ உயிரிழந்துள்ளனா.

அந்த வகையில், இந்த தீநுண்ணியை நாம் கட்டுப்படுத்த முடியாது என்றபோதும், அதிக பாதிப்புக்கு உள்ளாக வாய்ப்புள்ள மக்கள் மற்றும் மருத்துவ கட்டமைப்பு பின்னடைவுகளை சரிசெய்து நோயின் தாக்கத்தை குறைப்பதற்கான நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ள முடியும். அதாவது, அதிக பாதிப்புக்குள்ளாக வாய்ப்புள்ள மக்கள் பிரிவினருக்கு 100 சதவீத தடுப்பூசி திட்டத்தை செயல் படுத்தவேண்டும்.

அதுபோல, கொரோனா பரிசோதனைகள், பாதுகாப்பு நடைமுறைகளைத் தீவிரப்படுத்துதல், ஆய்வகங்கள் செயல்பாட்டை விரிவுபடுத்துதல் போன்ற நடவடிககைகள் மேற்கொள்ளப்படவேண்டும். கொரோனா தீநுண்மி மற்றும் தடுப்பூசிகள் மீதான தவறான தகவல்கள் பரப்பப்படுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்படவேண்டும். நமது கொரோனா தடுப்பு அணுகுமுறையில் தடுப்பூசியே தொடாந்து முக்கியப்பங்காற்ற உள்ளது என்று அவா கூறினார்.

## பொதுவெளியில் நடனமாடிய இணைக்கு 10 ஆண்டு சிறை

### ஈரானில் கொடூரம்

பொதுவெளியில் நடனம் ஆடிய இணையருக்கு 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்துள்ளது ஈரான் நீதிமன்றம்.

ஈரான் தலைநகர் தெஹ்ரானில் உள்ள பொது சதுக்கத்தின் முன் அஸ்தியாஜ் ஹகிகி மற்றும் அவரது வருங்கால கணவர் அமீர் முகமது அஹ்மதி இருவரும் நடனம் ஆடி அதை காணொலியாகப் பதிவு செய்திருந்தனர். நடனமாடியபோது அஸ்தியாஜ், ஹிஜாப் அணியாமல் இருந்தார்.

இந்தக் காணொலி சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டதைத் தொடர்ந்து அவர்கள் இருவரையும் ஈரானிய அதிகாரிகள் கைது செய்தனர்.

ஈரானில் பெண்கள் பொது வெளியில் நடனம் ஆடக் கூடாது என்று கூறப்படும் நிலையில், அஸ்தியாஜ் மற்றும் அமீர் முகமது ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று சமூக ஆர்வலர்கள் தெரிவித்தனர்.


இருவருக்கும் ஈரான் நீதிமன்றம் 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்துள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மாசா அமினி என்ற இளம் பெண்ணின் இறப்பைத் தொடர்ந்து கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் ஈரானில் ஹிஜாப் எதிர்ப்புப் போராட்டம் தீவிரமடைந்தது. மூன்று மாதங்களுக்கும் மேலாக நடந்த இந்தப் போராட்டத்தில் 300க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்தனர். 15,000 பேர் வரை கைது செய்யப்பட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட பலருக்கு ஈரான் தூக்குத் தண்டனை அறிவித்தது. ஆனால், இவற்றின் அதிகாரபூர்வ எண்ணிக்கை இதுவரை தெரியவில்லை. மேலும், போராட்டக்காரர்களில் 400 பேருக்கு 10 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஈரானின் இந்தச் செயலுக்கு சர்வதேச அளவில் கண்டனங்கள் எழுந்த நிலையிலும், ஹிஜாப் எதிர்ப்பு போராட்டத்தில் வன்முறையில் ஈடுபட்ட அனைவருக்கும் தண்டனை வழங்குவது தொடரும் என்று ஈரான் அரசு தெரிவித்துள்ளது.

## 17 பேர் கைது!



பாகிஸ்தானின் பொவா நகர காவல் வளாக மசூதியில் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல் தொடாபாக 17 பேரை அதிகாரிகள் கைது செய்துள்ளனா.

மசூதித் தாக்குதல் தொடர்பாக கைது செய்யப்பட்ட அனைவரும் சம்பவ இடத்தையொட்டி வசித்தவாகள் எனவும், அவாகள் அனைவரும் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர் எனவும் தகவல்கள் தெரிவித்தன.

திங்கட்கிழமை மதிய தொழுகையின்போது தலிபான் உறுப்பினர் ஒருவர் தனது உடலில் மறைத்து வைத்திருந்த வெடிகுண்டை வெடிக்கச்செய்து நடத்திய இந்தத் தாக்குதலில் 97 பொலிஸாா உட்பட 101 போ உயிரிழந்தனர்.

பாகிஸ்தான் தலிபான் அமைப்பின் தளபதி உமா காலித் குராசானி என்பவா, ஆப்கானிஸ்தானில் கடந்த ஓகஸ்ட் மாதம் கொல்லப்பட்டதற்குப் பழிவாங்கவே பொவா காவல் வளாக மசூதியில் தாக்குதல் நடத்தியதாக தலிபான்கள் உரிமை கோரியுள்ளனர்

## இராணுவ ஆட்சியை எதிர்த்து மியான்மரில் மௌன போராட்டம்

*மியான்மரில் மக்களால் தோந்தெடுக்கப்பட்ட அரசைக் கலைத்துவிட்டு இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றிய 2ஆவது ஆண்டு தினத்தையொட்டி, அந்த நாடு முழுவதும் ஜனநாயக ஆதரவாளாகள் ‘மௌன’ போராட்டத்தில் புதன்கிழமை ஈடுபட்டனா.*

*அந்த நாட்டில் இராணுவ ஆட்சி ஏற்பட்டதைக் கண்டித்தும், ஜனநாயக அரசை மீண்டும் அமைக்க வலியுறுத்தியும் போராட்டங்களை ஒருங்கிணைப்பதற்காக உருவாக்கப்பட்ட ‘பொது வேலைநிறுத்த ஒருங்கிணைப்பு குழு’, இதற்காக அழைப்பு விடுத்திருந்தது.*

*இராணுவ ஆட்சியாளாகளுக்கு தங்களது கண்டனத்தைத் தெரிவிக்கும் வகையில், பொதுமக்கள் தங்களது வீடுகளிலோ, அலுவலகங்களிலோ காலை 10 மணி முதல் மதியம் 3 மணி வரை உள்ளிருப்பு போராட்டம் நடத்தவேண்டும் என்று ஒருங்கிணைப்புக் குழு கூறியிருந்தது.*

*அதன்படி, மியான்மரின் மிகப் பெரிய நகரான யாங்கூன் உள்ளிட்ட பகுதிகளில் சாலைகள் வெறிச்சோடியிருந்தன. சமூக வலைதளங்களில் இது தொடர்பான படங்கள் வெளியாகி இருந்தன.*

*2021ஆம் ஆண்டில் இராணுவ ஆட்சி ஏற்பட்டதிலிருந்தே நாடு முழுவதும் அமைதியான முறையில் தினந்தோறும் போராட்டங்கள் நடைபெற்று வந்தன. இருந்தாலும், அதற்குப் பிறகு நாட்டின் பல்வேறு பகுதிகளில், குறிப்பாக கிராமப்புறங்களில் இராணுவ அரசுக்கு எதிரான போராட்டங்கள் பெரும் வன்முறைப் போராட்டங்களாகி, உள்நாட்டுப் போருக்கு இணையாக உருவெடுத்தன.*

*இந்த நிலையில், இராணுவ ஆட்சி ஏற்படுத்தப்பட்ட 2ஆவது ஆண்டு தினத்தையொட்டி நாடு முழுவதும் பொதுமக்கள் ‘மௌன’ போராட்டத்தில் செவ்வாய்க்கிழமை ஈடுபட்டனா.*

*மியான்மரில் கடந்த 2020ஆம் ஆண்டு நடைபெற்ற தோதலில், அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற ஆங் சான் சூகி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கட்சி அமோக வெற்றி பெற்று ஆட்சியமைத்தது. எனினும், அந்தத் தோதலில் முறைகேடுகள் நடைபெற்றதாகக் கூறி இராணுவம் அவரது அரசை கடந்த 2021ஆம் ஆண்டு பிப்ரவரி முதலாம் திகதி கலைத்துவிட்டு ஆட்சியைக் கைப்பற்றியது.*

*இதனை எதிர்த்து நடைபெற்ற போராட்டங்களில் 2,800க்கு மேற்பட்டோா உயிரிழந்தனர்.*

## காணாமல்போனது கிடைத்துவிட்டது

மேற்கு ஆஸ்திரேலியாவின் நியூமனில் உள்ள சுரங்கத்திலிருந்து பொத் நகரத்துக்கு வந்த பாரவூர்தியிலிருந்து காணாமல்போன ஆபத்தான கதிரியக்கப் பொருளை அதிகாரிகள் கண்டறிந்தனா.

வெறும் பட்டாணியின் அளவே கொண்ட அந்தப் பொருளால் தோல் பாதிப்பு முதல் புற்றுநோய் வரை ஏற்படும் அபாயம் இருப்பதாகக் கூறப்படும் நிலையில், அது விழுந்ததாகச் சந்தேகிக்கப்பட்ட மிகப் பெரிய பரப்பளவில் தேடுதல் குழுவினா 6 நாள்கள் தீவிரமாகத் தேடி அதனைக் கண்டறிந்தனா.

நியூமனில் உள்ள ரியோ டின்டோ சுரங்கத்திலிருந்து கடந்த ஜன. 10ஆம் திகதி புறப்பட்ட பாரவூர்தி, சுமாா 1,400 கி.மீ. தொலைவில் உள்ள பொத் நகரத்தை ஜன.16ஆம் திகதி அடைந்தது. இதற்கிடையில் அதில் கொண்டு வரப்பட்ட கதிரியக்க பொருள் காணமல்போயிருந்தது. அது எங்காவது விழுந்திருக்கலாம் என்று அதிகாரிகள் சந்தேகப்பட்டனர்.

கதிரியக்கத்தைக் கண்டறியும் டிடெக்டாகள் மூலம் கருவியைக் கண்டறியும் பணியில் அதிகாரிகள் ஈடுபட்டிருந்தனா. பாரவூர்தி பயணித்த பாதை மற்றும் அவை நின்று சென்ற இடங்களை அறிய ஜிபிஎஸ் தரவுகளை அதிகாரிகள் பயன்படுத்தினா. கடைசியில் ஒருவாறு அந்தச் சிறிய பொருளைக் கண்டுபிடித்துவிட்டனர்.

# 13 ஐ அமுல்படுத்தினால் தமிழ்-முஸ்லிம் இனத்தவர்களிடையே முரண்பாடு ஏற்படும்!



## கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா கருத்து

69 லட்சம் மக்களாணையுடன் ஆட்சிக்கு வந்த ஜனாதிபதியால் கிழக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டேன். சுபீட்சமான இலக்கு கொள்கைத்திட்டத்தில்13ஆவதுதிருத்தம்தொடர்பில்குறிப்பிடப்படவில்லை. 13 ஆவது திருத்தம் அமுல்படுத்தப்பட்டால் தமிழ்,முஸ்லிம் சமூகத்திற்கிடையில் முரண்பாடுகள் தோற்றம் பெறும் என கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தெரிவித்தார்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் தொடர்பில் அஸ்கிரிய,மல்வத்து ஆகியவற்றின் மகாசங்கத்தினரை சந்தித்து கலந்துரையாடியதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

கிழக்கு மாகாண ஆளுநராக கடந்த மூன்று ஆண்டு காலமாக பதவி வகிக்கிறேன். கிழக்கு மாகாணத்தில் தமிழ்,முஸ்லிம் மற்றும் சமூகத்தினர் இனவாதம் இல்லாமல் நல்லிணக்கத்துடன் வாழ்கிறார்கள். 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தினால் இன நல்லிணக்கத்துக்கு பாதிப்பு ஏற்படுமா என்ற அச்சம் கிழக்கு மாகாண மக்கள் மத்தியில் காணப்படுகிறது.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் ஊடாக நாட்டைப் பிளவுப்படுத்துமாறு கிழக்கு மாகாண மக்கள் கோரவில்லை. அரசியல்வாதிகளே நாட்டை பிளவுப்படுத்தும் முயற்சியில் மும்முரமாக செயற்படுகிறார்கள். கிழக்கு மாகாண மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அரசியல்வாதிகள் குரல் கொடுப்பதில்லை.

30 வருட கால யுத்தத்தால் கிழக்கு மாகாணம் மிக மோசமாக பாதிக்கப்பட்டது. தேசிய பொருளாதார அபிவிருத்தி திட்டத்தில் கிழக்கு மாகாணத்துக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என கிழக்கு மாகாண மக்கள் கோருகிறார்கள். நாட்டைப் பிளவுப்படுத்துமாறு மக்கள் கோரவில்லை.

கிழக்கு மாகாணத்தில் 40 சதவீதம் முஸ்லிம் சமூகத்தினரும்,35 சதவீதம் தமிழ் சமூகத்தினரும், 25 சதவீதம் சிங்கள சமூகத்தினரும் வாழ்கின்றனர். அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டால் தமிழ் முஸ்லிம் சமூகத்தினருக்கு இடையில் முரண்பாடுகள் தோற்றம் பெறும்.

நாடு பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள பின்னணியில் தேவையில்லாத பிரச்சினைகள் தோற்றம் பெறுவது பொருளாதார நெருக்கடியை மேலும் தீவிரப்படுத்தும். 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய தேவை ஏதும் கிடையாது.

69 லட்ச மக்களாணையுடன் ஆட்சிக்கு வந்த ஜனாதிபதியால் நான் கிழக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டேன். சுபீட்சமான கொள்கைத் திட்டத்துக்கு அமைய செயற்படுகிறேன், அந்தத் திட்டத்தில் 13 ஆவது திருத்தம் தொடர்பில் குறிப்பிடப்படவில்லை, சுபீட்சமான கொள்கை திட்டத்தில் இருந்து நான் விலகவில்லை, மாற்றமடையவுமில்லை. என்றார்.

## வலி. கிழக்கு தவிசாளரின் வழக்கு

# சட்டமா அதிபரின் ஆலோசனை கிடைக்க நீதிமன்றம் காத்திருப்பு

## மாத இறுதிக்குள் ஆவணத்தை தயார்ப்படுத்த பொலிஸாருக்கு உத்தரவு

வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷிற்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெறுவதற்கான ஆவணத்தினை இந்த மாத இறுதிக்குள் சமர்ப்பிக்கும்படி நீதிமன்றம் பொலிஸாருக்கு கண்டிப்பான உத்தரவிட்டது.

யாழ். மாவட்டம் புத்தூரில் அமைந்துள்ள வற்றாத நீரூற்றுக் கிணறான நிலாவரையின் அருகில் தொல்லியல் திணைக்களம் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்குத் தடை ஏற்படுத்தினார் என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை தவிசாளர் தியாகராஜா நிரோஷிற்கு எதிராகப் பொலிஸார் மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

புதன்கிழமை காலை இந்த வழக்குவிசாரணைக்குமீண்டும் எடுத்துக்கொள்ளப்பட்டது. வழக்கினை முன்கொண்டு செல்வதற்கான சட்டமா அதிபரின் ஆலோசனை ஏன் பெறப்படவில்லை என நீதிவான் பொலிஸாரிடம் கேள்வி எழுப்பினார். இம் மதத்திற்குள் சட்டமா அதிபரின் ஆலோசனைக்கான ஆவணத்தை தயார் செய்யவேண்டும் என்றும் பொலிஸாருக்குக் கண்டிப்பாக உத்தரவிட்டார்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் இராணுவத்தினரின் பாதுகாப்புடன் தொல்லியல் திணைக்களத்தினர் நிலாவரை கிணறு அமைந்துள்ள வளாகத்தில் சந்தேகத்திற்கு இடமான முறையில் அத்திபாரத்திற்குக் குழி தோண்டுவதைப் போன்று இரண்டு தடவைகள் முயற்சித்த நிலையில் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளரும் ஊர் மக்கள் பலரும் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர்.

இதனால் தொல்லியல் திணைக்களத்தின் முயற்சிகள் கைவிடப்பிட்டன.

இதையடுத்து இளைஞர்களைக் கூட்டிவந்து அதிகாரிகள் தமது கடமையைச் செய்யவிடாது தடுத்தார் என மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

## பரிசளிப்பு விழா

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் 12 ஆவது பரிசளிப்பு ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு இல.286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் அதிபர் திருமதி மேரி அஞ்செலா அல்போன்சஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் தலைமை அதிதியாக யாழ்ப்பாண வலயக் கல்விப பணிப்பாளர் முத்து இராதாகிருஷ்ணனும்,சிறப்பு அதிதியாக 'அகவொளி' குடும்ப வளத்துணை நிலையத்தின் இயக்குநர் அருட்பணி ம.டேவிட் அடிகளாரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். மாணவர்களின் பல்வேறு கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

## மூவருக்கு விளக்கமறியல்

கஞ்சா கடத்திச் சென்ற சமயம் கைது செய்யப்பட்டார்கள் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட சந்தேகநபர்கள் மூவரையும் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவிட்டது.

சில தினங்களுக்கு முன்னர் நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து 49 கிலோ கஞ்சாவுடன் மூவரைக் கைது செய்ததாகக் கடற்படை அறிவித்தது. அவர்கள் புதன்கிழமை ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர்.

மூவரையும் பெப்ரவரி 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்துறை நீதிவான் ஜெ.கஜநிதிபாலன் உத்தரவிட்டார்.

## இராம கிருஷ்ண மிஷனின்

# சிவானந்த நலன்புரி நிலையம் கொட்டகலையில் தொடக்கம்

(வி.ரி.சகாதேவராஜா)

இலங்கையில் 96 வருடங்கள் ஜீவ சேவையாற்றிவரும் இராம கிருஷ்ண மிஷனின் மற்றுமொரு சேவை நிலையம் எதிர்வரும் ஐந்தாம் திகதி தைப்பூசதினத்தன்று நுவரேலியா கொட்டகலையில் தொடங்க இருக்கின்றது.

சிவானந்த நலன்புரி நிலையம் என்ற பெயரில் இந்த நிலையம் தொடங்கப்பட இருக்கின்றது. மலையகத்திற்கான முதலாவது சேவை நிலையமான இதன் அடிக்கல் நாட்டு விழா காலை 9 மணிக்கு இலங்கை இராமகிருஷ்ண மின் தலைவர் சுவாமி அக்ஷராத்மானந்த ஜீ மகராஜ் தலைமையில் நடைபெறும். ஹரிங்டன் தோட்டத்தில் இந்த நலன்புரி நிலையம் அமைக்கப்படுவதற்கான நிலத்தை விஜயபாலன் செட்டியார் மிஷனுக்கு வழங்கி வைத்துள்ளார்.

நுவரெலியா மாவட்ட செயலர் பி.கே.நந்தன நிகழ்வில் சிறப்பு அதிதியாகக் கலந்துகொள்வார். பிரதேச விகாராதிபதி திஸ்ஸமகாராமய தம்மஜோதியும் கலந்து சிறப்பார்.

இதற்கென்று நாடெங்கிலும் இருந்து இராமகிருஷ்ண மிஷன் பக்தர்கள் அபிமானிகள் கொட்டகலை செல்ல இருக்கின்றனர்.

# கசூரினா கடந்கரைக்கு எல்லை வேலி அமைப்பு

யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறையில் அமைந்துள்ள புகழ்பெற்ற கசூரினா கடற்பரைக்கு எல்லை வேலி அமைக்கப்பட்டுள்ளது.

கசூரினா பீச் பிரதேசத்தின் எல்லைப்படுத்தல், அபிவிருத்தி ஒதுக்கத்திலிருந்து சபையின் 4.2 மில்லியன் ரூபா செலவில் 1410 அடி நீளமான நிரந்தர முட்கம்பி வேலி அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஈழத்து சிதம்பரத்தின் தீர்த்தக்கரையிலிருந்து கசூரினா பீச் பிரதேசத்திற்குள் பிரவேசிப்பதும், இராணுவ முகாம் பிரதேசத்திலிருந்து பீச் பகுதிக்குள் நுழைவதும் கட்டுப்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. கசூரினா பீச் பிரதேசம் முழுவதும் 8 ஏக்கர் விஸ்தீரணம் என்பது கொண்டது. அதனை முழுமையாக அபிவிருத்தி செய்து சிறந்த சுற்றுலா மையமாக மாற்றுவதற்காக ஊர்காற்றுறை பிரதேச சபையால் மேலும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று தவிசாளர் பாலச்சந்திரன் தெரிவித்தார்.

# 13க்கு மாகா சங்கங்களின் கடும் எதிர்ப்பு வேண்டும்



## சரத் வீரசேகர வலியுறுத்து

அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் முழுமையாக அமுல்படுத்தப்பட்டால் நாட்டில் சிங்கள- தமிழ் இனக்கலவரம் மீண்டும் தோற்றம் பெறும். ஆகவே 13 ஆவது திருத்தத்துக்கு மகாசங்கத்தினர் கடுமையான எதிர்ப்பை தெரிவிக்க வேண்டும்என ஆளும்தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யாஹம்பத், அட்மிரல் சரத் வீரசேகர உள்ளிட்ட தேசிய ஒருங்கமைப்பு ஒன்றியத்தின் பிரதிநிதிகள் அஸ்கிரிய பீடம், மல்வத்து பீடம், ஶ்ரீலங்கா ராமன்ய நிகாய மற்றும் ஶ்ரீ லங்கா அமரபுரம் ஆகியபீடங்களின் மகாநாயக்க தேரர்களை சந்தித்து அரசலமைப்பின் 13 ஆவது திருத்தம் தொடர்பில் கலந்துரையாடினர்.

அது தொடர்பில் செய்தியாளர்களிடம் பேசிய சரத் வீரசேகர தெரிவித்ததாவது:

அரசமைப்பை திருத்தம் செய்யவோ,13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவோ ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு மக்களாணை கிடையாது. முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷவிற்கு கிடைக்கப் பெற்றமக்களாணைக்கு அமையவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செயற்பட வேண்டும்.

நாடுவங்குரோத்துநிலை அடைந்துள்ள பின்னணியில் அரசமைப்பின் 13 ஆவதுதிருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தும் யோசனையை கைவிடுமாறு ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளோம்.

ஆட்சியாளர்களின் விருப்பத்துக்குஅமைய அரசமைப்பை செயற்படுத்த முடியாது. 13 ஆவது திருத்தம் தொடர்பில் நாட்டுமக்களின்நிலைப்பாட்டை தெரிந்துக் கொண்டு அதன்படி செயற்பட வேண்டும் என்பதை அரச தலைவர்களிடம் சுட்டிக் காட்டியுள்ளோம். நாட்டில் தேவையில்லாத பிரச்சினைகளை ஏற்படுத்தும் 13 ஆவது திருத்தத்துக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது என மகாசங்கத்தினரும் குறிப்பிட்டனர்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தால் நாடு 09 மாகாணங்களாக பிரிக்கப்பட்டது. நிலப்பரப்பில் சிறிய நாடான இலங்கைக்கு 09 நிர்வாக அலகுகள் அவசியமற்றவை.

13 ஆவது திருத்தத்தின் பிரகாரம் மாகாணங்களுக்கு பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை வழங்கினால் நாட்டின் தேசிய பாதுகாப்பு கேள்விக்குள்ளாக்கப்படும். விடுதலைப் புலிகள் அமைப்பு இலங்கையில் இருந்து மாத்திரமே ஒழிக்கப்பட்டுள்ளது, புலிகள் அமைப்பின் ஆதரவாளர்கள் மற்றும் விடுதலை புலிகள் சர்வதேச மட்டத்தில் பலமான முறையில் செயற்படுகிறார்கள்.

மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்கினால் 09 மாகாணங்களுக்கு 09 பொலிஸ்மா அதிபர்கள், இவர்கள் மாகாண முதலமைச்சரால் நியமிக்கப்படுவார்கள், முதலமைச்சர்கள் அரசியல்வாதிகள். ஆகவே, பொலிஸ்மா அதிபர்கள் அரசியல்வாதிகளால் நேரடியாக நியமிக்கப்படும்போது நாட்டின் சட்டம் ஒழுங்கு எவ்வாறு பாதுகாக்கப்படும்.

1987 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை ஆட்சியில் இருந்த அரச தலைவர்கள் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த முயற்சிக்கவில்லை, ஏனெனில் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தினால் நாட்டில் தேவையிலாத பிரச்சினைகள் தோற்றம்பெறும் என்பதை அவர்கள் நன்கு அறிந்திருந்தார்கள்.

13 ஆவது திருத்தம் அமுல்படுத்தப்பட்டால் நாட்டில் சிங்கள- தமிழ் இனகலவரம் மீண்டும் தோற்றம் பெறும்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவது அவசியமற்றது. புதிய அரசமைப்பிற்கு மக்கள் ஆணை வழங்கியுள்ளார்கள்.

புதிய அரசமைப்பு தொடர்பான வரைவு ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது, ஆகவே புதிய அரசமைப்பை உருவாக்கி 13ஆவது திருத்தத்தை முழுமையாக இரத்து செய்ய மகாசங்கத்தினர் ஆட்சியாளர்களுக்கு ஆலோசனை வழங்க வேண்டும். -என்றார்.

# உள்ளூர் சபைகளை கலைப்பது குறித்து அமைச்சர்தான் முடிவெடுக்கவேண்டும்

## தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர் தெரிவிப்பு

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்திருகிறோம். அத்துடன் உள்ளூராட்சி மன்ற சபைகளைக் கலைக்கும் அதிகாரம் உள்ளூராட்சிமன்ற அமைச்சருக்கே இருக்கிறது. அதனால் இதுதொடர்பாகத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரிடம் கேட்டிருக்கிறோம் என தேர்தல் ஆணைக் குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதம் தொடர்பாக குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு விடுக்கப்பட்டிருக்கும் அச்சுறுத்தல் தொடர்பில் மேற்கொள்ளப்படும் விசாரணை நடவடிக்கை தொடர்பில் ஆணைக்குழுவுக்கு திருப்தியடைய முடியாமல் இருக்கிறது.

அதேபோன்று தேர்தலை நடத்துவதற்காக அரச அமைப்புகளில் இருந்து கிடைக்கப்பெறும் ஆதரவு போதுமானதாக இல்லாமல் இருக்கின்றமை தொடர்பாக ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளேன்.

அத்துடன் தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு விடுக்கப்பட்டிருக்கும் அச்சுறுத்தல் தொடர்பான விசாரணை நடவடிக்கை துரிதமாகவும் செயற்பாடுடையதாகவும் இருக்கவேண்டும்.

அச்சுறுத்தலுக்கு ஆளாகியுள்ள உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் பாதுகாப்பு தொடர்பில் திருப்தி ஏற்பட்டுள்ளது.

அத்துடன் யார் என்ன சொன்னாலும் உயர் நீதிமன்றத்தின் நிலைப்பாட்டின் பிரகாரமே ஆணைக்குழு செயற்படுகிறது. நிதிச் செயலாளர் நாடாளுமன்ற நிதிக்குழுவுக்கு வந்த சந்தர்ப்பத்தில், நிதிப் பிரச்சினை தொடர்பாக குறிப்பிட்டிருந்த போதும் தேர்தலுக்கு நிதி வழங்க முடியாது எனத் தெரிவிக்கவில்லை.

மேலும், உள்ளூராட்சிமன்ற சபைகளை கலைக்கும் அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு இல்லை. அது உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சருக்கே இருக்கிறது. அதனால் இதுதொடர்பாக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரிடம் கேட்டிருக்கிறோம் எனவும் குறிப்பிட்டார்.



# யானைகளினால் பயிர்கள் நாசம்

## விசுவமடுவில் விவசாயில் பாதிப்பு

நாச்சிகுடா பகுதியில் கடந்த சில தினங்களாக இரு காட்டு யானைகள் குடியிருப்பு பகுதிக்குள் நுழைந்து மேட்டுநிலப் பயிர்களை அழித்து வருகின்றன என்று மக்கள் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு உட்பட்ட விசுவமடுவில் அமைந்துள்ள நாச்சிகுடாவிலேயே இப்படிக் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துள்ளது.

பூசணிச்செடிகள் காயும் பிஞ்சுமாக உள்ள நிலையில் யானைகள் அவற்றைக் கிளறி எறிந்தும் பிய்த்தும் அட்டகாசம் செய்துள்ளன என்று விவசாயிகள் கவலை தெரிவித்தனர். இருபதிற்கும் மேற்பட்ட தென்னங்கன்றுகளும் யானைகளால் கபளீகரம் செய்யப்பட்டுள்ளன.

இது போன்று கடந்த வருடமும் பூசணி செடிகளும் தென்னை மரங்களையும் யானைகள் அழித்ததாகவும் விவசாயிகள் தெரிவித்தனர். இன்முறையும் அழிவை ஏற்படுத்தியுள்ளதாகவும்

யானைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டினர்.


''நாம் நிம்மதியாக இரவு வேலைகளில் படுத்துறங்க முடியவில்லை. எமது வாழ்வாதாரமே இந்தப் பயிர்களை நம்பித்தான் இருக்கின்றது. யானைகள் அவற்றை அழித்துவிட்டால் வருமானம் இல்லாமல் நாங்கள் பட்டினிதான் கிடக்கவேண்டும். பயிரழிவிற்கு அரசு இழப்பீடுகள்கூடத் தராது" என்கின்றனர் விவசாயிகள்.

யானைகளால் ஏற்படும் பயிரழிவு குறித்து மாவட்டச் செயலர் மற்றும் கிராம சேவையாளர் ஆகியோருக்கு தெரியப்படுத்திய போதிலும் கடந்த காலங்களில் எந்த இழப்பீடும் வழங்கப்பட்டில்லை என்றும் விவசாயிகள் குற்றஞ்சாட்டினர்.

யானைகள் இரவு நேரத்தில் வந்து இந்த அழிவுகளை ஏற்படுததிவிட்டுச் சென்று விடுகின்றன என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

# உகந்தை முருகனுக்கு ஞாயிறன்று தைப்பூசம்

## திருவிழாவிற்கான ஏற்பாடுகள் பூர்த்தி



(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்றுபிரசித்திபெற்ற உகந்தமலை முருகன் ஆலயத்தில் எதிர்வரும் ஐந்தாம் திகதி ஞாயிற்றுக்கிழமை தைப்பூசத் திருவிழா சிறப்பாக இடம்பெற இருக்கின்றது.

ஆலய பிரதம குரு சிவஶ்ரீ க.கு.சீதாராம் குருக்கள் தலைமையில் பூசைகள் இடம்பெறும். காலை 10 மணியளவில் வள்ளியம்மன் ஆலயத்திலிருந்து பாற்குடபவனி தொடங்கி முருகன் ஆலயத்தை வந்தடையும்.

மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலை ஓய்வு நிலை அதிபர் வேலாப் போடி இலட்சுமிசுந்தரம் உபயத்தில் தைப்பூச திருவிழா வழமைபோல இம்முறையும் இடம் பெறவிருக்கிறது என்று ஆலய வண்ணக்கர் சுதுநிலமே திஸாநாயக்க தெரிவித்தார்.

பாற்குடபவனிக்கான பால் இலவசமாக வழங்கப்படும். இதற்கான உபய ஏற்பாடுகளை தம்பிலுவிலைச் சேர்ந்த ரமேஷ்குமார் ஜனாதினி தம்பதிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

பக்தர்களுக்கு விடே பேருந்துப் போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக ஆலய செயலாளர் கு.சிறிபஞ்சாட்சரம் தெரிவித்தார்.

காலையில் பாற்குடப் பவனியைத் தொடர்ந்து அபிஷேகம் மற்றும் அலங்கார பூசை இடம்பெறும். மாலையில் திருவிளக்குப்பூசை வசந்த மண்டப அலங்கார பூசை சுவாமி உள்வீதி உலா வருதல் என்பன இடம்பெறும்.

### பாராட்டு மெசேஜ்கள் வந்து குவிந்ததால்

# கோப்பையை வென்றதும் என் இன்ஸ்டா பக்கம் முடங்கியது

### மெஸ்ஸியின் மகிழ்ச்சிப் பகிர்வு



கடந்த டிசெம்பர் மாதம் உலகக் கோப்பையை வென்றதும் தனது இன்ஸ்டாகிராம் கணக்கு முடங்கியதாக தெரிவித்துள்ளார் ஆர்ஜென்டினாவின் கால்பந்தாட்ட வீரர் மெஸ்ஸி. இன்ஸ்டாகிராம் தளத்தில் அதிகமாகப் பின்தொடர்பவர்களைப் பெற்ற உலக பிரபலங்களில் மெஸ்ஸியும் ஒருவர். உலகக் கோப்பையுடன் அவர் கொடுத்திருந்த உற்சாக போஸ் இன்ஸ்டாவில் அதிக லைக்குகளை அள்ளி இருந்தது.

கடந்த டிசெம்பர் மாதம் பிரான்ஸ் அணியு டன் ஆர்ஜென்டினா இறுதிப் போட்டியில் விளையாடியது. சமநிலை தகர்ப்பு உரைகள் (பெனால்டி ஷூட் அவுட்) முறையில் பிரான்ஸை மெஸ்ஸிதலைமையிலான ஆர்ஜென்டினா வீழ்த்தி இருந்தது. இந்தத் தொடரில் சிறந்த வீரருக்கான தங்கப் பந்து விருதை மெஸ்ஸி வென்றார். மொத்தம் 7 கோல்களை அவர் உலகக் கோப்பை 2022 தொடரில் பதிவு செய்திருந்தார்.

இந்த நிலையில், அவர் அண்மையில் பண்பலை வானொலி ஒன்றுக்குப் பேட்டி கொடுத்திருந்தார். அதில்தான் தனது இன்ஸ்டாகிராம் பக்கம் உலகக் கோப்பை வெற்றிக்கு பிறகு முடங்கியதாக தெரிவித்தார்.

எனது இன்ஸ்டாகிராம் பக்கம் உலகக்கோப்பைவெற்றிக்குபிறகுஅப்படியே சில நாட்களுக்கு முடங்கி இருந்தது. மில்லியன் கணக்கில் இன்ஸ்டாவில் எனக்கு மெசேஜ் வந்திருந்தது. அதுதான் அதற்குக் காரணம்.

அதேபோல எனது இன்ஸ்டா கணக்கை நான்தான் நிர்வகித்து வருகிறேன். அதை நிர்வகிக்க தனியாக யாரையும் நான் பணிக்கு அமர்த்தவில்லை. எந்தவொரு நிறுவனமும் எனது கணக்கை நிர்வகிக்கவில்லை என மெஸ்ஸி தெரிவித்தார்.

# 3 வகைக் கிரிக்கெட்டிலுமே சதம் அடித்து அசத்திய கில்



இந்திய கிரிக்கெட் அணியின் இளம் வீரரான சுப்மன் கில், நியூஸிலாந்து அணிக்கு எதிரான மூன்றாவது ரி20 போட்டியில்சதம்விளாசினார். இதன் மூலம் டெஸ்ட், ஒருநாள் மற்றும் டி20 என கிரிக்கெட்டின் மூன்று வகைப் போட்டிகளிலும் சதம் விளாசிய ஐந் தாவது இந்திய கிரிக்கெட் வீரர் என்ற பெருமையை அவர் படைத்தார்.

இதற்கு முன்னர் இந்த சாதனையை இந்திய வீரர்கள் ரோகித் சர்மா, சுரேஷ் ரெய்னா, கே.எல்.ராகுல் மற்றும் விராட் கோலி ஆகியோர் படைத்துள்ளனர்.

சர்வதேச ரி20 கிரிக்கெட்டில் இந்திய அணிக்காக ஒரே இன்னிங்ஸில் அதிக ஓட்டங் களைக் குவித்த வீரர் என்ற சாதனையையும் சுப்மன் கில் படைத்தார்.

நியூஸிலாந்துக்கு எதிரான போட்டியில் 63 பந்துகளில் 126 ஓட்டங்களை அவர் எடுத்திருந்தார். இதுதான் சர்வதேச ரி20 கிரிக்கெட்டில் இந்தியா சார்பில் பதிவு செய்யப்பட்டுள்ள அதிகூடிய ஓட்ட எண்ணிக்கை. கில் பதிவு செய்துள்ள முதல் சதமும்கூட.

ரி20 கிரிக்கெட்டில் இந்திய அணிக்காக அதிகபட்சமாக கோலி, 61 பந்துகளில் 122 ஓட்டங்களும், ரோகித், 43 பந்துகளில் 118 ஓட்டங்களும் எடுத்ததே இதுவரையில் சாதனையாக இருந்து வந்தது.

இந்தப் போட்டியில் 35 பந்துகளுக்கு 50 ஓட்டங்களை கில் எட்டியிருந்தார். அடுத்த 76 ஓட்டங்களை வெறும் 28 பந்துகளில் எடுத்து மிரட்டினார். அவர் ஆடிய ஒவ்வொரு ஷாட்டும் அட்டகாசம், அற்புதம் என சொல்லும் அளவுக்கு இருந்தது. 15 நாட்கள் இடைவெளியில் ஒருநாள் கிரிக்கெட்டில் இரட்டை சதம் மற்றும் ரி20 கிரிக்கெட்டில் சதம் பதிவு செய்துள்ளார். நடப்பு ஆண்டில் (32 நாட்களில்) 3 சதம் மற்றும் 1 இரட்டை சதம் பதிவு செய்துள்ளார்.

2019 முதல் சர்வதேச கிரிக்கெட்டில் இந்திய அணிக்காக கில் விளையாடி வருகிறார். பஞ்சாப் மாநிலத்தை சேர்ந்தவர். உள்ளூர் கிரிக்கெட் மற்றும் ஐபிஎல் தொடரில் விளையாடி கவனம் ஈர்த்தவர். இந்திய அணிக்காக 19 வயதுப் பிரிவு கிரிக்கெட்டிலும் விளையாடி உள்ளார்.

13 டெஸ்ட், 21 ஒருநாள் மற்றும் 6 ரி20 போட்டிகளில் இதுவரை விளையாடி உள்ளார். டெஸ்ட் மற்றும் ரி20 கிரிக்கெட்டில் தலா ஒரு சதம் பதிவு செய்துள்ளார். ஒருநாள் கிரிக்கெட்டில் 4 சதங்கள் பதிவு செய்துள்ளார். இதையெல்லாம் வைத்து அவரை இந்திய கிரிக்கெட் அணியின் எதிர்காலம் என ரசிகர்கள் போற்றி வருகின்றனர்.

# நியூஸி.க்கு எதிராக இந்தியா நேற்று வரலாற்று வெற்றி

### 168 ஓட்டங்கள் வித்தியாசம்; தொடரையும் கைப்பற்றியது

நியூஸிலாந்துக்கு எதிரான கடைசி மற்றும் மூன்றாவது ரி20 ஆட்டத்தில் இளம் வீரா சுப்மன் கில்லின் சூறாவளி ஆட்டத்தால் 168 ஒட்டங்கள் வித்தியாசத்தில் வரலாற்று வெற்றியைப் பெற்று தொடரையும் 2–1 என கைப்பற்றியது இந்தியா.

முதலில் ஆடிய இந்திய அணி 4 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 234 ஓட்டங்களைக் குவித்தது. பின்னா ஆடிய நியூஸிலாந்து அணி. வெறும் 66 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து படுதோல்வி அடைந்தது.

ஐசிசி ஒருநாள் உலகக் கோப்பை போட்டி வரும் ஒக்டோபா, நவம்பா மாதங்களில் இந்தியாவில் நடைபெறுகிறது. இதன் ஒரு பகுதியாக இந்திய அணி ஒருநாள், ரி20 தொடாகளில் பங்கேற்று ஆடி வருகிறது. இலங்கை, நியூஸிலாந்தை ஒருநாள் தொடாகளில் வழித்துத் துடைத்திருக்கிறது இந்தியா.

இதன் தொடாச்சியாக 3 ஆட்டங்கள் ரி20 தொடா நடைபெற்று வருகிறது. முதல் ஆட்டத்தை நியூஸி. அணி 21 ஓட்டங்கள் வித்தியாசத்திலும், இரண்டாவது ஆட்டத்தை இந்தியா 6 விக்கெட் வித்தியாசத்திலும் வென்றன. மூன்றாவது மற்றும் கடைசி ஆட்டம் அகமதாபாத் நரேந்திர மோடி மைதானத்தில் புதன்கிழமை இரவு நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வென்ற இந்தியா துடுப்பாடத் தீர்மானித்தது.

இந்திய அணிக்காக கில் மற்றும் இான் கின் தொடக்க ஆட்டக்காரர்களாக களம் கண்டனர். கின், ஒரு ஓட்டம் எடுத்த நிலையில் விக்கெட்டை இழந்தார். பின்னர் வந்த திரிபாதி உடன் 80 ஓட்டங்களுக்கு இணை அமைத்தார் கில். ராகுல் திரிபாதி, 22 பந்துகளில் 44 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். தொடர்ந்து சூர்யகுமார் யாதவ், 13 பந்துகளில் 24 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

அணித் தலைவர் ஹர்திக் பாண்டியாவுடன் 103 ஓட்டகளுக்கு கில் இணை அமைத்தார். 54 பந்துகளில் சதம் விளாசி இருந்தார் கில். மறுமுனையில் பாண்டியா, 17 பந்துகளில் 30 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். இறுதி வரை விக்கெட்டை இழக்காமல் இருந்த கில், 63 பந்துகளில் 126 ஓட்டங்களை எடுத்திருந்தார். 12 பவுண்டரிகள் மற்றும் 7 சிக்ஸர்களை அவர் விளாசினார். 20 ஓவர்கள் முடிவில் இந்திய கிரிக்கெட் அணி 4 விக்கெட்டுகள் இழப்பிற்கு 234 ஓட்டங்கள் எடுத்தது.

235 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்கை துரத்திய நியூசிலாந்து அணிக்கு முன் வரிசை துடுப்பாளர்கள் சரியாக விளையாடவில்லை. முதல் நான்கு வீரர்களில் மூன்று வீரர்கள் ஒற்றை இலக்க ரணிலும், மார்க் சாப்மேன் ஓட்டமெதுவும் எடுக்காமலும் ஆட்டமிழந்தனர். ஐபிஎல் தொடரில் அகமதாபாத் பிட்சை ஹோம் பிட்சாக கொண்டுள்ள ஹர்திக் பாண்டியா இந்தப் போட்டியில் முதல் ஓவரே பந்து வீசினார்.

இவரே, நியூசிலாந்து அணியின் சரிவுக்கும் வித்திட்டார். முதல் ஓவரே பின் ஆலனை வெளியேற்றிய அவர், தனது அடுத்த ஓவரில் கிளென் பிலிப்ஸ் அவுட் ஆக்கி அசத்தினார். அர்தீப் சிங், உம்ரான் மாலிக் மற்றும் ஷிவம் மாவியும் தங்கள் பங்கிற்கு தலா இரண்டு விக்கெட்கள் வீழ்த்தினார். இதனால் நியூசிலாந்து அணி 10 ஓவர்களுக்கு முன்பாகவே எட்டு விக்கெட்களை இழந்து தடுமாறியது. அந்த அணியில் டேரில் மிட்செல் மட்டும் ஆறுதலாக நிலைத்து ஆடி 35 ஓட்டங்கள் சேர்த்தார். இறுதியில் 12.1ஓவரில் 66 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்து நியூசிலாந்து அணி தோல்வியை தழுவியது.

168 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அசத்தல் வெற்றிபெற்ற இந்திய அணி தரப்பில் ஹர்திக் பாண்டியா அதிகபட்சமாக 4 விக்கெட்கள் வீழ்த்தினார்.

# இஷான், அர்ஷ்தீப் இருவருமே இனி இந்திய சூப்பர் ஸ்டார்கள்

### அனில் கும்ளே தெரிவிப்பு

இந்திய இளம் வீரர்களான இஷான் கின், அர்ஷ்தீப் சிங் ஆகிய இருவரையும் பாராட்டிப் பேசியுள்ளார் முன்னாள் வீரர் அனில் கும்ப்ளே. அவர்கள் இருவரும் இந்தியாவின் வருங்கால சூப்பர் ஸ்டார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த வருடம் இங்கிலாந்துக்கு எதிராக அறிமுகமானார் அர்ஷ்தீப் சிங். 25 ஆட்டங்களில் 39 விக்கெட்டுகள் எடுத்துள்ளார். இான் கின், வங்கதேசத்துக்கு எதிரான ஒருநாள் ஆட்டத்தில் இரட்டைச் சதமெடுத்தார். இவர்களைப் பற்றி ஜியோ சினிமா ஓடிடிடி தொடர்பான நிகழ்ச்சி ஒன்றில் முன்னாள் வீரர் அனில் கும்ப்ளே பேசியிருந்தார்.

”அர்ஷ்தீப் சிங்குடன் இணைந்து பணியாற்றியுள்ளேன். இந்திய அணிக்காக விளையாடும் அளவுக்கு முன்னேறியுள்ளார். அவருடைய வளர்ச்சியைப் பார்த்து உண்மையிலேயே மகிழ்ச்சி அடைகிறேன். அடுத்தத் தலைமுறை வேகப்பந்து வீச்சாளர்களில் அர்ஷ்தீப் சிங்கை அடுத்த சூப்பர் ஸ்டாராகக் கருதுகிறேன். துடுப்பாளர்களில் தனக்குக் கிடைத்த வாய்ப்புகளை நன்குப் பயன்படுத்தி வருகிறார் இான் கின். இரட்டைச் சதமெடுத்துள்ளார். அடுத்த சூப்பர் ஸ்டாராக வருவார் என நம்பிக்கையாக உள்ளேன்” என்றார் அனில் கும்ளே.

# கல்வியங்காடு வாள்வெட்டின் முதன்மை சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம் கல்வியங்காடு பகுதியில் உள்ள கடை ஒன்றினுள் வாள்களுடன் புகுந்து உரிமையாளரை வெட்டியவர்களில் முதன்மை சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பாடசாலை ஒன்றின் அபிவிருத்திச் சங்க முரண்பாடு காரணமாகவே இந்தச் சம்பவம் இடம்பெற்றது என்றும் டென்மார்க்கில் உள்ள ஒருவர் பணம் அனுப்பி இந்த வன்முறையை வழிநடத்தியுள்ளார் என்றும் விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் கூறினர்.

யாழ்ப்பாணம் மூத்த பொலிஸ்அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரே முதன்மைச் சந்தேக நபரைக் கைது செய் தனர்.

கோப்பாய் பொலிஸ் நிலைய பெருங்குற்றப் பிரிவு உப பொலிஸ் பரிசோதகர் லக்சாந் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் நேற்று மூவர் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 29 வயதுடைய ஜீவன்பாய் (சஜீவன் ), கல்வியங்காடுபகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய கிருஸ்ணன் மற்றும் கோப்பாயைச் சேர்ந்த 26 வயதுடைய சுதர்சன் ஆகியமூவரே ஏற்கனவே கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் முன்னெடுத்த விசாரணைகளில் யாழ்ப்பாணம் கலட்டி பகுதியில் வைத்து 22 வயதுடைய சிந்துஜன் என்பவர் கைது செய்யப்பட்டார். இவரே இந்த வாள்வெட்டின் முதன்மை சந்தேக என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் டென்மார்க்கில் வசிக்கும் விஸ்வா என்பவர் பணம் அனுப்பியே வர்த்தகநிலையத்துக்குள் புகுந்து வன்முறையில் ஈடுபட்டதாகத் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் கூறினர்.

சம்பவத்துடன் 7 பேர் தொடர்புடைய நிலையில் நால்வர்கைதுசெய்யப்பட்டுள்ளனர். மேலும் மூவர் தேடப்படுகின்றனர் என்று பொலிஸார்தெரிவித்தனர்.

# தீவு மக்களை வஞ்சிக்காத சபையை நாம் அமைப்போம்!

## வேலணையில் அங்கஜன் சபதம்



தீவுப்பகுதி மக்களை வஞ்சிக்காத சபையை நாம் அமைப்போம் என நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தீவகத்தில் போட்டியிடுகின்ற ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி வேட்பாளர்களுடனான கலந்துரையாடலும், தேர்தலுக்கான ஆயத்தப்படுத்தல் செயற்றிட்டமும் வேலணையில் நடைபெற்றது. இதன் போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

தீவுப்பகுதி மக்கள் பல துன்ப துயரங்களை சந்தித்துள்ளார்கள். பல அபிவிருத்தியை செய்யவேண்டிய பிரதேசமாக தீவகம் காணப்படுகிறது.

நாம் இந்த தேர்தல் மூலம் வஞ்சிக்காத சபையை நாம் அமைப்போம். –என்றார்.

அத்துடன் தீவக மக்கள் எதிர்கொள்ளும் விவசாய, மீன்பிடி சார் பிரச்சினைகளில் பிரதேச சபைகளால் தீர்க்கவேண்டியதை செய்து முடிக்கும் வல்லமை கொண்ட ஆட்சியை பிரதேச சபைகளில் அமைப்போம் என வேட்பாளர்கள் உறுதிபூண்டனர்.

வேலணை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு பிரதேச சபைகளுக்கான வேட்பாளர்கள் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

# யானை மொட்டு கூட்டுச் சதியை மக்கள் முறியடித்தே தீரவேண்டும்

## கிண்ணியாக் கூட்டத்தில் சஜித் வலியுறுத்து



2019 ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவை தோற்கடிக்க யானை – மொட்டு கூட்டுச் சதி நடந்தது போல், தற்போது உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மக்களைப் படுபாதாளத்தில் போட யானை – மொட்டு கூட்டுச் சதி ஒன்று இடம்பெற்று வருகின்றது. இந்தச் சதியை முறியடிக்கும் பொறுப்பு மக்களுடையது.

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

கிண்ணியாவில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரசாரப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் போதே சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி சபைத் தேர்தல் வெற்றியுடன் இந்நாட்டின் அரசியல் கலாசாரத்தை ஐக்கிய மக்கள் சக்தி மாற்றியமைக்கும்.

தவிசாளர்கள், பிரதி தவிசாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் ஒப்பந்தம் செய்வதையும், மக்கள் வளத்தைப் பயன்படுத்தி பிரதிநிதிகள் வளமடைவதையும் தடை செய்வோம்.

ராஜபக்சக்கள் உருவாக்கிய மோசடி மற்றும் ஊழல் கலாசாரத்தை ஐக்கிய மக்கள் சக்தி முற்றாக இல்லாதொழிக்கும். இன்று இனவாதம், இன பேதம், மதவாதம், மத பேதம் என்பன தோற்றுப்போயுள்ளது. இனவாதத்தையும், மதவாத்தையும் விதைத்து நாட்டை அழித்த ராஜபக்சக்களின் மொட்டின் கதையும் முடிந்துவிட்டது. ஆனால், தற்போது யானையும் மொட்டும் ஒன்று சேர்ந்து மக்களின் மீது வரியை சுமத்தி மக்களுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றது.

ஒரு நாட்டின் அரசு முதுகெழும்புடன் சரியான நிலைப்பாட்டிலிருந்து சர்வதேச அமைப்புக்களைக் கையாள்வதுடன் நாட்டுநலனுக்கான தீர்மானங்களை எடுக்கவேண்டுமேதவிர, மக்களுக்கு அழுத்தங்களைப் பிரயோகிக்கக் கூடாது. ஐக்கிய மக்கள் சக்தி அரசு சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தம் செய்தாலும், அந்த ஒப்பந்தம் மக்களின் வாழ்வை அழிக்காது, மக்களின் வாழ்க்கையைக் கட்டியெழுப்பும் விதமாகவே மேற்கொள்ளும் – என்றார்.

## ஜனாதிபதி கதிரை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார். உள்ளூராட்சி சபைத் தேர்தல்தொடர்பில்கருத்துக்கூறிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது கட்சியின் வெற்றியின் ஊடாக மக்கள் ஆணை புரட்சி ஒன்றை ஏற்படுத்துவோம். அந்த மக்கள் ஆணையின் ஊடாக ரணிலின் ஜனாதிபதி கதிரையைப் பறிப்போம்.

தேர்தல் நடத்துவதற்குப் பணம் இல்லை என்றால் அரசு ஆட்சியில் இருந்து விலக வேண்டும். இல்லாவிட்டால் மக்கள் விரும்பும் ஆட்சியை அமைப்பதற்கு அவர்களுக்கு வாய்ப்புகளை வழங்க வேண்டும்.

இன்று அரசுக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் பொது எதிரியாக மாறி இருப்பது ஜே.வி.பி.தான். அதற்குக் காரணம் ஜே.வி.பி. வெற்றியை நோக்கி நகர்வதுதான்.

நான் கொழும்பு மாநகர சபையின் உறுப்பினராக இருந்திருக்கின்றேன். அதனால் உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகம் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். அடிமட்டத்தில் இருந்து பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதற்கு உள்ளூராட்சி சபைதான் ஒரே வழி. பொருளாதாரத்தைக் கட்டி எழுப்ப வேண்டும் என்றால் அரசியல் ஸ்தீரத்தன்மையை ஏற்படுத்த வேண்டும். அதற்கான முதலாவது வாய்ப்புதான் உள்ளூராட்சி சபைத் தேர்தல். இதை மக்கள் சரியாகப் பயன்படுத்த வேண்டும்.

இந்தத் தேர்தலில் நல்லவர்களை மக்கள் தெரிவு செய்ய வேண்டும். இந்தத் தேர்தல் கட்சிகளின் தேவையைவிட மக்களின் தேவைக்காக வருகின்ற தேர்தல் – என்றார்.

# கம்பளையில் கோர விபத்து; இரண்டு இளைஞர்கள் சாவு!

கம்பளை நாவலப்பிட்டிய பிரதான வீதியில் எக்கால பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இரண்டு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர்.

நேற்றிரவு இடம்பெற்ற இந்த விபத்தில் கம்பளை, வெலம்பொட பிரதேசத்தைச் சேர்ந்த 19 மற்றும் 20 வயதுகளுடைய இளைஞர்களே சாவடைந்துள்ளனர். நாவலப்பிட்டியவில் இருந்து வெலம்பொட நோக்கி இரண்டு இளைஞர்களும் மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருக்கையிலேயே காருடன் மோதுண்டு இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம்–
076 443 8622

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.02.2023 இல் வெளியிடப்பெற்றது.